# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 25

02.07.2023




உங்களை உயர்த்திக் கொள்ள ...... 02

சிற்பக்கலை ஒரு தொழில் மட்டுமல்ல ... 12

அதிக இலாபம் பெறும் .... 16

# பொருளாதாரத்தை அச்சுறுத்தும் மனிதவள வெளியேற்றம்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY




ஞாயிற்றுக்கிழமை
02.07.2023

# உங்களை உயர்த்திக்கொள்ள அவசியமாகவுள்ள நெட்வேர்க்

**- ஜானைன் கார்னர் -**

"உங்களுக்கு என்ன தெரியும் என்பதை விட, உங்களுக்கு யாரைத் தெரியும் என்பதே உங்கள் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிற ஒரு விஷயம்" என ஆரம்பித்து, நெட்வேர்க்கின் முக்கியத்துவத்தையும், அதில் உள்ள முக்கியமான சூட்சுமங்களையும் விளக்கமாக எடுத்துச் சொல்கிறது 'இட்ஸ் /ஹ யு நோ' (It's Who You Know) என்கிற புத்தகம். அதிலிருந்து முக்கியமான சில தகவல்கள் இந்த வாரம்...




மற்றவர்களுடன் தொடர்பில் இருத்தல், மற்றவர்களுடன் இணைந்திருத்தல், மற்றவர்களுடன் ஒத்துழைத்தல் என்கிற மூன்றும் வெற்றிக்கு வழிவகை செய்யும் விஷயங்கள் ஆகும். இதுவரை பலரும் உங்களிடம் 'நல்ல நெட்வொர்க்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் அது உங்களுடைய வளர்ச்சிக்கு மிகவும் அவசியம்' என்று கூறியிருப்பார்கள்.

நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றே ஒன்றுதான். "உங்களுக்கு என்ன தெரியும் என்பதை விட, உங்களுக்கு யாரைத் தெரியும் என்பதே உங்கள் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிற ஒரு விஷயம்" என ஆரம்பித்து, நெட்வேர்க்கின் முக்கியத்துவத்தையும், அதில் உள்ள முக்கியமான சூட்சுமங்களையும் விளக்கமாக எடுத்துச் சொல்கிறது 'இட்ஸ் /ஹ யு நோ' (It's Who You Know) என்கிற புத்தகம். ஜானைன் கார்னர் என்கிற ஆஸ்திரேலியாவைச் சார்ந்த பெண்மணி எழுதிய புத்தகம் இது.

"உண்மையான வெற்றி உங்களுக்கு எப்படிக் கிடைக்கும்? உங்களைச் சுற்றி மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும், பலம் பொருந்திய, நம்பத் தகுந்த, உங்களுடன் இறுக்கமான பந்தம் கொண்ட அளவில் இருக்கிற நெட் வொர்க்கே உங்களுக்கு வெற்றியைக் கொண்டுவந்து சேர்க்கும். நீங்கள் கம்ப்யூட்டருக்குப் பின்னாலும் கைத்தொலைபேசிக்குள்ளும் ஒளிந்துகொண்டு நெட்வேர்க்கை வளர்த்தெடுக்க முடியாது. அதனைத் தாண்டி, ஆஃப்லைனில் - அதாவது நேரடியாக நீங்கள் செய்ய வேண்டியது தான் இந்த நெட்வேர்க்கிங்.

நீங்கள் செய்யும் வேலையில்/வர்த்தகத்தில்/ சாதிக்க விரும்பும் காரியங்களில் அவர்களுடைய பங்களிப்பு மற்றும் செல்வாக்கு எந்தளவுக்கு உதவியாக இருக்கும், அவர்கள் எந்தளவுக்கு உங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றனர். எந்தளவுக்கு அவர்களால் உங்களுக்கு உதவ முடியும்? என்பது போன்ற விஷயங்களே உங்களுடைய வெற்றியில் முக்கியமான பங்களிப்பைத் தருபவையாகும். சரியானதொரு நெட்வொர்க் என்பது உங்களுடைய தனிப்பட்ட மற்றும் தொழில்சார்ந்த வாழ்க்கையில் சரியான நபர்களுடன் சரியான அளவிலான உறவில் இருப்பதே ஆகும்.

சரி, நெட்வொர்க்கே இல்லை எனில், என்ன ஆகும் என்று கேட்கிறீர்களா? வாய்ப்புக்களைத் தவறவிட வேண்டியிருக்கலாம், புதிய விஷயங்களுக்கான சாத்தியக்கூறு இருப்பதை நீங்கள் அடிக்கடி கண்டுபிடிக்கத் தவறலாம். உங்கள் சிந்தனை தேக்கநிலையை அடையலாம். இப்பேர்பட்ட விஷயங்களெல்லாம் சேர்ந்து உங்களுடைய கனவு மற்றும் தொழில் இலட்சியங்களை அடைய முடியாத தூரத்திலேயே உங்களைத் தங்க வைத்துவிடும்" என்று சொல்லும் ஆசிரியர், நெட்வொர்க்கிங் என்பது வெற்றிக்கு எப்படி



உதவும்? என ஒரு சம்பவத்தைச் சொல்லி விளக்குகிறார்.

"பத்து வருடங்களுக்குமுன் தொழில் முனைவையும் மோட்டிவேஷனல் பேச்சையும் தன்னுடைய வாழ்க்கையாகக் கொண்டிருந்த ஒருவர் என்னிடம் ஆலோசனை பெற வந்தார். அவர் செய்து வந்த இரண்டு வேலைகளிலும் தலைசிறந்த திறமையை அவர் கொண்டிருந்தார்.

மக்கள் தொடர்பு (Public relation) என்பது அவருக்குக் கைவராத கலையாக இருந்தது. எனக்கோ தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் என்ன செய்ய வேண்டும்? என்று சொல்லும் அளவுக்கு அது அத்துப்படியான ஒரு விஷயம். தனித்துவமாக மக்களைக் கவரும்வகையில் தொடர்பு கொள்வது எப்படி? அப்படிச் செய்வதில் என்னென்ன சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்? இவற்றில் நீண்ட காலத்துக்கு உகந்த பொறுமையாகச் செய்ய வேண்டிய விஷயங்கள் என்னென்ன? குறுகிய காலத்தில் வெற்றி தருகிற ஆனால், நீண்ட காலத்துக்கு சற்றும் உதவாத விஷயங்கள் என்னென்ன என்பதையெல்லாம் நான் மிகவும் சிரமப்பட்டு, அவருக்கு சொல்லிக் கொடுத்தேன். இவையெல்லாம் முடிந்தபின், என்னாலான சிறு உதவியை அவருக்கு செய்யும் நோக்கத்துடன் ஊடகத்



துறையில் இருந்த என் நண்பர்களில் சிலரை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு விடை பெற்றேன்.

ஓரிரு மாதங்களுக்குப் பின், அவரைக் குறித்த ஒரு தகவல் தேசிய நாளிதழ் ஒன்றில் வந்திருந்தது. நான்கு மாதங்களுக்குப் பின் பிரபல பத்திரிகை ஒன்றில் தொடர் எழுதப்போதாகக் கேள்விப்பட்டேன். சில ஆண்டுகளில் அவருடைய கட்டுரைகள் மிகவும் அதிக அளவில் வாசிக்கப்படுகிற இணையத் தளங்களில் வெளிவர ஆரம்பித்தன. அதன்பின் அவர் ஒரு புத்தகம் எழுதி வெளியிடப் போவதாக செய்தி வெளியானது.

அவர் குறித்த செய்தியைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அவருடைய வாழ்வில் ஒரு சிறு பங்களிப்பை நான் செய்தேன் என்ற திருப்தி எனக்கு இருக்கும். ஒரு சிலரை அறிமுகப்படுத்தினேன். அந்தத்தொடர்பாடலே அவருடைய திறமையைக் குன்றிலிட்ட விளக்காகப் பிரகாசிக்க வைத்து அவரைப் பல புதிய உயரங்களை அடைய வைத்தது. சரியான நபர்களுடன் சரியான நேரத்தில் தொடர்பில் இருப்பது ஒருவருடைய வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய மிகவும் அத்தியாவசியமான விஷயமாகும்” என்கிறார் ஆசிரியர்.

“தயாளகுணம் மற்றும் பரஸ்பர உதவி என்கிற இரண்டும் மனிதர்களுக்கு மகத்தான பலன்களை அளிக்கவல்ல ஒரு குணாதிசயமாகும். எந்த மாதிரியான மனிதர்களுடன் நாம் தொடர்பில் இருக்கிறோமோ, அவர்கள் நம்முடைய ஐடியாக்களை மிளிரவோ, காணாமல்போகவோ செய்யவல்லவர்கள் ஆவார்கள். நாம் செய்யும் தொழிலில் (ஏன் நாம் வாழும் வாழ்க்கையில்கூட) முன்னேறுவதற்குக் கடின உழைப்பு தேவைப்படும். நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு தடைகளை நாம் எதிர்கொள்ளவே செய்வோம். அவற்றில் சிலவற்றை நாம் தாண்டிச் செல்வோமா? என்பதுகூட நமக்கு சில சமயம் தெரியாது. இந்தப் பயணத்தில் நீங்கள் தவிர்க்க வேண்டிய ஒரே ஒரு விஷயம் எது தெரியுமா? உங்களுடைய பயணத்தைத் தனியாகச் செய்ய முயல்வதைத்தான்.

இந்தப் பயணத்தைத் தனியாகச் செய்யாமல், சரியான நபர்களுடன் சேர்ந்து செய்ய முயலும்போது நம்மால் சுலபமாகப் பயணித்து முன்னேறிச் செல்ல முடியும். தொடர்பு என்பது மிகவும் சக்தி வாய்ந்த, அத்தியாவசியமான மற்றும் அதிக பலனைத் தரக்கூடிய ஒரு விஷயம். இந்தத் தொடர்பாடலை எப்படி ஏற்படுத்திக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நாம் பெறப்போகும் வெற்றி அமைகிறது” என்கிறார் ஆசிரியர்.

தொடர்பாடலைப் பொறுத்தவரை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது இந்தப் புத்தகம். முதல் பிரிவு நமக்கு தொடர்பாடல் என்பது ஏன் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது? என்பதை விளக்குகிறது.

இரண்டாவது பிரிவு, யாருடன் தொடர்பாடலைச் செய்துகொள்ள வேண்டும், சரியான நபர்களைத் தேர்வு செய்வது எப்படி, தற்போது உங்களுக்கு இருக்கும் தொடர்பில் எத்தனை பேர் சரியான நபர்களாக இருக்கின்றனர் என்பதை எப்படிக் கண்டறிவது என்பது குறித்து விளக்கமாகக் கூறுகிறது. இந்தப் பிரிவில் நம் ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் 12 வகையான நபர்கள் குறித்தும் விளக்கமாகக் கூறுகிறது இந்தப் புத்தகம்.

மூன்றாவது பிரிவு, இப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட நபர்களிடத்தில் தொடர்பாடலை செய்து கொள்வது எப்படி என்பதற்கான நடைமுறைகளை விளக்கமாகக் கூறுகிறது.

முன்னேற்றத்துக்கு உதவுபவர்களை 4 பிரிவாக பிரிக்கலாம். நீங்கள் முன்னேற்றமடைய உங்களை ஊக்குவிக்கும் நபர்கள் (Promoters), நீங்கள் முன்னேற்றம் காண உதவும் நபர்கள் (Pit crew), முன்னேற்றம் அடையத் தேவையான பல விஷயங்களையும் சொல்லித் தரும் நபர்கள் (Teachers), முகத்தில் அறைந்தாற்போல் குறைநிறைகளைச் சொல்லி நிறைய விஷயங்களை நீங்கள் சிறப்பாகச் செய்து முடிக்க உதவும் நபர்கள் (Butt-kickers) என்கிற இந்த நான்கு பிரிவு நபர்களைத் தேர்ந்தெடுத்து நீங்கள் அவசியம் உங்களுடைய தொடர்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதில் புரொமோட்டர்கள் என்ற பிரிவில் உற்சாகப்படுத்தும் நபர்கள், உங்களுக்கான வாய்ப்புகளை / நீங்கள் கொண்டிருக்கும் திறமைக்கேற்ற விஷயங்களைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து உங்களிடம் சேர்ப்பவர் மற்றும் உங்களுக்குத் தேவையான உத்வேகத்தைத் தருபவர் என்ற மூன்று வகை நபர்கள் அடங்குவார்கள்.

முன்னேற்றம் காண உதவும் நபர்கள் என்ற பிரிவில் உங்கள் மீது உண்மையான அன்பு செலுத்துபவர்கள், உங்களுக்குத் தேவையான நபர்கள் மற்றும் விஷயங்களுடன் (அறிவு/இயந்திரம்/தொழில்நுட்பம் போன்ற) உங்களை இணைக்கும் நபர்கள், உங்களைச் சமன் செய்யும் குணாதிசயம் கொண்ட (உங்களுடைய கோபம் - சாந்தம் / வேலை - வாழ்க்கை / உற்சாகம் - சோர்வு / மகிழ்ச்சி – துயரம் போன்றவற்றை) என்ற மூன்று வகை நபர்கள் அடங்குவார்கள். முன்னேற்றம் அடையத் தேவையான பல விஷயங்களையும் சொல்லித் தரும் நபர்கள் என்கிற பிரிவில், நீங்கள் இருக்கும் துறையில் சாதித்தவர்கள், பேராசிரியர்கள் மற்றும் எதையும் தீரச் சிந்தித்து திட்டங்களைத் தீட்டித் தரும் வல்லமை கொண்டவர்கள் அடங்குவார்கள்.

முகத்தில் அறைந்தாற்போல் நிறைகுறைகளைச் சொல்கிற நபர்கள் பிரிவில், ஏளனம் செய்யாமல் உங்கள் முன்னேற்றத்தை மனதில் கொண்டு உண்மையை ஒளிவுமறைவு இல்லாமல் பேசும் குணம் கொண்ட நபர்கள், உங்கள் எண்ணத்தைச் செயலாக மாற்றத் தூண்டுகோலாக இருக்கும் நபர்கள் மற்றும் அறிவுரைகள் மற்றும் வழி காட்டுதல்களை வழங்கும் நபர்கள் (Mentors) அடங்குவார்கள்.

இத்தகைய நபர்களை நீங்கள் தொடர்பில் கொண்டிருந்தால் உங்களுடைய முன்னேற்றம் என்பது நிச்சயமான ஒரு விஷயமாகிவிடும் என்று சொல்லும் ஆசிரியர், நெட்வொர்க்கில் உருவாகக்கூடிய சிக்கல்களையும் அதை எப்படிக் கையாள வேண்டும் என்பதற்கான வழிகளையும் எடுத்துச்சொல்லி, தொடர்பாடல் குறித்த இந்தப் புத்தகத்தை முடிக்கிறார்.

இந்த உலகில் வெற்றி பெற்ற மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள் அவர்களின் வெற்றிக்குக் கச்சிதமாக அமைந்த தொடர்பாடல் ஒரு முக்கியமான காரணம் என்பதைத் தெரிந்துகொள்வீர்கள். அப்படிப்பட்ட வெற்றியை நீங்களும் அடைய இந்தப் புத்தகத்தை அவசியம் ஒருமுறை படிக்கலாம்.

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0764438620

# அஸ்வெசும

உள்நாட்டு கடன்மறுசீரமைப்புக்கான திட்டத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருக்கும் நிலையில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அஸ்வெசும திட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. இந்தத் திட்டத்தில் தமது பெயர் இணைக்கப்படவில்லை எனத் தெரிவித்துப்பெருமளவிலான மக்கள் வீதிகளில் இறங்கியிருக்கும் அதேவேளையில், இதில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும் என அரசாங்கமும் அறிவித்திருக்கின்றது,

சமூகத்திலுள்ள வறிய மக்களின் நலன்களைப் பேணுவதற்காகவே இந்த அஸ்வெசும திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. நாட்டின் பொருளாதார முறைமையினாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவுவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். இது நல்ல திட்டம்தான் என்பதை எதிர்க் கட்சிகளும் வரவேற்றுள்ளன. ஆனால், இதன் நடைமுறைகள் தொடர்பில்தான் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு போராட்டங்களும் தீவிரமடைந்திருக்கும் ஒரு நிலையில்தான், அதன் வலுவைக் குறைக்கும் நோக்கத்துடன் மேன்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. நிவாரணத் திட்டத்தைப் பெறுவதற்குத் தகுதி இருந்தும், தமது பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை எனக் கருதுபவர்கள் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னதாக மேன்முறையீடு செய்யலாம் என அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

பொருளாதார மீட்சிக்காகச் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றின் உதவிகளைத்தான் அரசாங்கம் நம்பியிருக்கின்றது என்பது இரகசியமல்ல. அதற்காகப் பல நிபந்தனைகளை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தமும் இலங்கைக்குள்ளது. வறிய மக்களுடைய சமூக நலத் திட்டமாக பல வருடகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தியை நிறுத்த வேண்டும் என்பது நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்று.

பொருத்தமற்ற பலருக்கு இதன்மூலம் நிதி வீணடிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. அரசியல்ரீதியாக பலர் சமுர்த்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சமுர்த்தியை நிறுத்துவது அரசியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அதாவது வாக்கு வங்கியைப் பாதிக்கும் விடயம் இது. அதனைச் செய்வதற்கு அரசாங்கம் தயங்கியமைக்கு காரணமும் அதுதான்.

வறுமையை ஒழிப்பதற்காகவென இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் மூன்றாவது திட்டம் இது. 1989 இல் பிரேமதாஸ ஜனாதிபதியாகியபோதுதான் இவ்வாறான திட்டம் ஒன்று ஜனசவிய என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டது. ஐந்து வருட திட்டமாகவே இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1995 இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானபோது, சமுர்த்தி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது அஸ்வெசும என்ற பெயரில் சமூக நலன்புரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சர்ச்சைகள் உருவாகியுள்ளன.

இரண்டு விடயங்கள் இதில் குறிப்பிடப்பட வேண்டும். இந்தச் சமூக நலன்புரித் திட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவது, வறுமை ஒழிப்புக்கான திட்டங்கள் கடந்த 35 வருடங்களில் வெற்றிபெறவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. இதற்கு அரசியல் நலன்கள் காரணமாக இருந்துள்ளன. தொடர்ச்சியாக நிவாரணங்களை நம்பியிருக்கும் ஒரு சமூகத்தை உருவாக்கியுள்ளோம். இவ்வாறான திட்டங்கள் நலிந்துள்ள தரப்பினரைச் சொந்தக் காலில் நிற்கச் செய்வனவாக இருக்க வேண்டுமே தவிர, அரச நிவாரணத்தை நம்பி வாழும் தரப்பினரை உருவாக்குவதாக இருக்கக்கூடாது.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு

கடந்த வாரத் தமிழர் பொருண்மியம் வார இதழில் வெளியாகியிருந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு - அரசிடமுள்ள உபாயம் என்ன என்ற கட்டுரை சமகால பொருளாதார விடயங்களை அறிந்துகொள்வதற்கு முற்படுபவர்களுக்கும், பொருளாதார மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இது போன்ற கட்டுரைகளை பொருண்மியம் இதழ் மட்டும்தான் வெளியிட்டு வருகின்றது. கடன் மறுசீரமைப்பு எனத் தொடர்ச்சியாகச் செய்திகளில் நாம் கேட்டுவருகின்றபோதிலும், இது போன்ற கட்டுரைகளின் மூலமாகவே உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பதை எம்மால் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. பொருண்மியம் ஆசிரியருக்கு நன்றி.

**ஆர்.பவதாறிணி, திருநெல்வேலி.**

●●●

## எள்ளுப்பாகு உற்பத்தியில் சாதனை

எள்ளுப்பாகு உற்பத்தியில் சாதிக்கும் கண்ணம்மா நிறுவனம் குறித்த உங்களுடைய கட்டுரை சிறப்பாக இருந்தது. ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து நடத்துவது என்பது எந்தளவுக்குக் கடினமானது என்பதை அந்த நிறுவனத்தை ஆரம்பித்தவர் தெளிவாகக் கூறியிருக்கின்றார். உள்ளூர் உற்பத்திகளைப் பொறுத்தவரையில், அவற்றின் தரத்தைப் பேணுவது முக்கியம். அதன் மூலமாகவே மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், சந்தை வாய்ப்பையும் தக்கவைத்துக்கொள்ள முடியும். இதனை அவரது நேர்காணலின் மூலமாக எம்மால் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிந்தது. புதிதாகத் தொழில் தொடங்குவோருக்கு இது ஒரு முன்னுதாரணம்.

**க.கந்தசாமி, தொண்டமானாறு.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-----------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - --------------------------------------------------
**முகவரி** - --------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------
**சந்தாக் காலம்** - ---------------------------------------------
**செலுத்திய தொகை** - -----------------------------------------
**செலுத்திய திகதி** - ------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,53,300 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,67,200 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 250/= |
| பச்சைமிளகாய் | - 700/= |
| தக்காளி | - 250/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 250/= |
| கோவா | - 300/= |
| கரட் | - 360/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 180/= |
| வாழைக்காய் | - 100/= |
| சின்ன வெங்காயம் | - 380/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாவற்காய் | - 500/= |
| வெண்டிக்காய் | - 300/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 600/= |
| லீக்ஸ் | - 350/= |
| பீற்றூட் | - 450/= |
| கறிமிளகாய் | - 400/= |
| முருங்கைக்காய் | - 550/= |
| போஞ்சி | - 530/= |
| கத்தரி - தம்புள்ள | - 200/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** செங்குரங்கு ஏற்றுமதிக்கான திட்டம் நிறுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் கூட அரசாங்கம் அதற்கு இன்னும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாகத் தெரியவில்லையே?

**எம்.காயத்திரி,**
**வெள்ளவத்தை.**

**பதில் -** உண்மைதான். சுற்றுச்சூழல் அமைப்புக்கள் சிலவும், விலங்குகளின் நலன் பேணும் அமைப்புக்கள் சிலவும் செங்குரங்கு



களின் ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் என்று சட்டத்தை நாடியிருக்கின்றன. இந்தச் சட்டப் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பதுதான் அரசாங்கம் இன்று எதிர்கொண்டிருக்கும் பிரச்சினை என்பது தெரிகின்றது.

சீனாவிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்று தான் இலங்கையிலிருந்து செங்குரங்குளை இறக்குமதி செய்வதற்கான கேள்விக் கட்டளையை அனுப்பியிருந்தது. அதற்கு எதிராக இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், குறிப்பிட்ட சீன நிறுவனம் தன்னுடைய நிலைப்பாட்டை இன்னமும் மாற்றிக்கொள்ளவில்லை. அவர்கள் தொடர்ந்தும் தமது கோரிக்கையில் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

இதனால் இலங்கை அரசாங்கமும் இந்தச் சட்டப் பிரச்சினையை எவ்வாறு சமாளித்துக் குரங்குகளை எவ்வாறு ஏற்றுமதி செய்யலாம் என்பதையிட்டே ஆராய்ந்து வருகின்றன. சீனாவிலுள்ள தனியார் நிறுவனத்தைவிட, ஐரோப்பிய நாடுகள் சிலகூடக் குரங்குகளை இறக்குமதி செய்வதற்கான தமது விருப் பத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த சட்டத் தடையைத் தாண்டி குரங்குகளை ஏற்றுமதி செய்வதில்தான் அதன் அக்கறையும் அதிகமாக இருப்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர அண்மையில், ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த தகவல்கள் இதனை உறுதிப்படுத்துவதாகவே இருக்கின்றன.

குரங்குகளால் பயிர்களுக்கு ஏற்படுத்தப் படும் அழிவுகள் அதிகமாக இருக்கின்றது. கிராமப் பகுதிகளில் பெருந்தொகையான பயிர்களும், பழங்களும் குரங்குகளால் அழிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் அழிவுகளிலிருந்து உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லாத நிலைமையையும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். உற்பத்தியாளர்கள் - விவசாயிகள் இதனால் பாரியளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதும் உண்மைதான்.

விலங்குகளின் நலன்பேணும் அமைப்புக்களும், சுற்றாடல் அமைப்புக்களும் இந்த அழிவுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க என்ன தீர்வை வைத்துள்ளார்கள் என்ற கேள்வியையும் அமைச்சர் முன்வைத்திருக்கின்றார். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாக இருப்பாதாகவே தெரிகின்றது. அதனை நியாயப்படுத்துவதற்கான கருத்துக்களைத் தான் அமைச்சரும் கூறி வருகின்றார். இப் போது தடையாக இருப்பது சில அமைப்புக்கள் சட்டத்தை நாடியிருப்பதுதான்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 198/= |
| கனடா டொலர் - | 226/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 328/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 221/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 383/= |
| சுவிஸ் பிராங் - | 334/= |
| அமெரிக்க டொலர் - | 301/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 221/= |
| கனடா டொலர் - | 240/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 347/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 235= |
| ஸ்ரோலிங் பவுண் - | 403/= |
| சுவிஸ் பிராங் - | 355/= |
| அமெரிக்க டொலர் - | 316/= |

# சமூக வலைத்தளங்களில் உங்களுக்காக கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புக்கள்



**‘சமூக வலைத்தளங்கள் கோலோச்சும் இந்தக் காலத்தில் தேர்தல் முதல் சினிமா வரை பெரும்பாலும் அனைத்துத் துறை சார்ந்த விளம்பரங்களுக்கும் சமூக வலைத்தளங்களின் உதவியையும் பெற வேண்டியிருக்கிறது. இந்த விளம்பரங்களைச் சரியாக நிர்வகிக்கும் ஆட்களுக்கு வேலை வாய்ப்புகள் இத்துறையில் கொட்டிக்கிடக்கின்றன’**

- ராகா -

நாளுக்கு நாள் சமூக வலைத்தளப் பயனர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. இன்று சமூக வலைத்தளத்தின் வாயிலாகக் கோரிக்கை விடுத்து வேலை பெறும் அளவுக்கு அதன் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே, நிறுவனங்களும் சமூக வலைத்தளத்தில் பக்கங்களை உருவாக்கித் தங்கள் நிறுவனம் சார்ந்த தகவல்கள் மட்டுமல்லாமல், வேலை வாய்ப்புத் தகவல்களையும் அளிக்கின்றன. அது மட்டுமல்ல, சமூக வலைத்தளம் என்பது வெறுமனே பொழுதுபோக்குத் தளம் மட்டுமல்ல வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடியதாகவும் இருக்கிறது. இந்தச் சூழலில், சமூக வலைத்தளம் சார்ந்து சில வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் பார்ப்போம்.

சமூக வலைத்தள மேலாளர்: ஃபேஸ்புக், ரூவிற்றர், இன்ஸ்டகிராம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளப் பக்கங்களை நேர்த்தியாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்தான், சமூக வலைத்தள மேலாளர். எழுத்து, ஒளிப்படம், காணொளி வாயிலாக ஒரு தகவல், பொருள், நிகழ்வை மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் பொறுப்பும் சமூக வலைத்தள மேலாளருடையது.

சமூக வலைத்தளங்கள் கோலோச்சும் இந்தக் காலத்தில் தேர்தல் முதல் சினிமா வரை பெரும்பாலும் அனைத்துத் துறை சார்ந்த விளம்பரங்களுக்கும் சமூக வலைத்தளங்களின் உதவியையும் பெற வேண்டியிருக்கிறது.

இந்த விளம்பரங்களைச் சரியாக நிர்வகிக்கும் ஆட்களுக்கு வேலை வாய்ப்புகள் இத்துறையில் கொட்டிக்கிடக்கின்றன. இதழியல், தகவல் தொடர்பியல் படிப்புகளைப் படித்தவர்கள் மட்டுமல்ல, வேறு படிப்புகளைப் படித்தோரும், சான்றிதழ் படிப்புகளைப் படித்து இத்துறையில் பணியாற்றலாம்.

உள்ளடக்கம் எழுதுபவர்: சமூக வலைத்தளம் என்பது காணொளி, ஒளிப்படங்களால் மட்டும் நிறைந்தது அல்ல. எழுத்துகளாலும் நிறைந்தது. சமூக வலைத்தளத்தில் சரியான உள்ளடக்கத்தைப் (Content) பதிவிட்டால் மட்டுமே ஒரு பொருள் அல்லது நிகழ்வைச் சரியாகப் பயனர்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியும். இதனால், சமூக வலைத்தளம் சார்ந்த வேலைகளில் எழுதுபவர்களுக்கும் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

தமிழ், ஆங்கிலம் மட்டுமல்லாது பிற மொழிகளிலும் சரியான உள்ளடக்கத்தை எழுதுபவருக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. இதற்கு ஆங்கிலம் அல்லது பிற மொழி சார்ந்த பட்டப் படிப்புகள், இதழியல் அல்லது தகவல் தொடர்பியல் சார்ந்த படிப்புகளைப் படித்தால் போதுமானது. முக்கியமாகத் திறமையாகவும் சுவையாகவும் எழுதுவதற்கான திறன் இருப்பது அவசியம்.

டிஜிற்றல் மார்க்கெட்டர்: திறன்பேசி, மடிக்கணினி, இணையத்தள வசதி இருந்தால் போதும் டிஜிற்றல் மார்க்கெட்டிங் வட்டத்துக்குள் வந்துவிடலாம். குறிப்பாகச் சமூக வலைத்தளத்தில் உங்களுக்கு அதிகப் பின்தொடர்வோர் இருந்தால், நீங்களே ஒரு டிஜிற்றல் மார்க்கெட்டராகப் பணியாற்றிவிடலாம். விளம்பரப்படுத்துவதுதான் டிஜிறறல் மார்க்கெட்டரின் பிரதான வேலை. போட்டி மிகுந்த சூழலில் தனித்துச் செயல்பட விரும்புவோர் இப்பணியை ஏற்று செய்ய முடியும்.

ஆனால், நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கும் டிஜிற்றல் சூழலுக்கேற்ப அப்டேட் செய்துகொள்ள வேண்டியது அவசியம். இதற்கு எந்தப் பட்டப் படிப்பும் போதுமானது. ஆனால், பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் பேசும் திறன் இருக்க வேண்டும். தேவைப்படுவோர் டிஜிற்றல் மார்க்கெட்டிங் தொடர்பான குறுகிய காலப் படிப்புகளைப் படித்து இத்துறையில் வேலை ஈட்டலாம்.

சைபர் பாதுகாப்பு நிபுணர்: தரவுகளால் இணைய உலகம் நிரம்பி வழிகிறது. ஒரு நிறுவனம் அல்லது தனிநபரின் தரவுகளைப் பாதுகாப்பது கட்டாயமாகிறது. தகவல் திருட்டு, மொத்தமாகவே சமூக வலைத்தளப் பக்கத்தை ‘ஹேக்கிங்’ செய்வது போன்ற குற்றங்கள் இணைய உலகில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இன்னும் சொல்லப்போனால், தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இணையக் குற்றங்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன.

இவை அனைத்துமே சைபர் குற்றங்களில் சேருபவை. எனவே, இதுபோன்ற சைபர் குற்றங்கள் நடைபெறாதபடி முழுப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கிக் கண்காணிப்பதும் அவசியமாகிறது. இதற்கு மிகத் திறமையாகப் பணியாற்றக்கூடிய சைபர் பாதுகாப்பு நிபுணர்களின் உதவியும் தேவைப்படுகிறது.

நாளுக்கு நாள் சைபர் பாதுகாப்புக்கான வேலைக்கும் ஆட்களின் தேவை அதிகரித்தவண்ணம் உள்ளது. இந்தப் பணிக்கு சைபர் பாதுகாப்பு படிப்புகள் அல்லது தகவல் பாதுகாப்பு தொடர்பான படிப்புகள் தேவை!.

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

-------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------

புரோட்டீன் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

-------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

-------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

--------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------




### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

--------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

--------------------------------------



### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113




# பொருண்மியம் விருதுகள் - 2023



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் “கிரீன் மீடியா” நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழா பொருண்மியம் நடத்தும் “கோடைக் கொண்டாட்டம்“ நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவாகள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்.

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)

குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.07.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**

# பொருளாதாரத்தை அச்சுறுத்தும் மனிதவள வெளியேற்றம்






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

மனிதவள வெளியேற்றம் என்பது மனித மூலதனத்தை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அல்லது ஒரு தொழிலில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாறுவதைக் குறிக்கிறது. சுருங்கக் கூறின், திறமையான தனிநபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் சொந்த நாடுகளை விட்டு (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வளரும் நாடுகள்) வேறு இடங்களுக்குச் சென்று சிறந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும்போது பொதுவாக மனிதவள வெளியேற்றம் ஏற்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின்படி 2022 ஆம் ஆண்டில் 300,000 இற்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் பாதுகாப்பான வேலைகளுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இது வரலாற்றில் மிக உயர்ந்த மனிதவள வெளியேற்றமாகும்.

இலங்கையில் மனிதவள வெளியேற்றம் நீண்ட கால பொருளாதார விளைவைக் கொண்டதாக இருக்கப்போகின்றமை ஒரு சோகமான விடயமாகும். புலம்பெயர்தல் மீதான இந்த மோகம் இலங்கை மீது பாரிய பாதகமான விளைவை ஏற்படுத்தப்போகிறது. ஏனெனில் இதனால் இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பங்களிப்பதற்கும் திறமையான பணியாளர்கள் சிலரே மிஞ்சுவார்கள்.

இலங்கையர்கள் பல தசாப்தங்களாக வளைகுடாவைத் தவிர அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். 1950களில் ஆங்கில மொழி பேசும் பர்கர்கள் (Burghers) ஒரு சிறிய சிறுபான்மையினர் மற்றும் காலனித்துவ காலத்தில் போர்த்துகீசியம், டச்சு மற்றும் பிரிட்டிஷ் குடியேறியவர்களின் இனக் கலவையிலிருந்து வந்த வம்சாவளியினர் ஆஸ்திரேலி

> **இலங்கையில் மனிதவள வெளியேற்றம் நீண்ட கால பொருளாதார விளைவைக் கொண்டதாக இருக்கப்போகின்றமை ஒரு சோகமான விடயமாகும். புலம்பெயர்தல் மீதான இந்த மோகம் இலங்கை மீது பாரிய பாதகமான விளைவை ஏற்படுத்தப்போகிறது. ஏனெனில் இதனால் இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பங்களிப்பதற்கும் திறமையான பணியாளர்கள் சிலரே மிஞ்சுவார்கள்.**

யாவுக்குச் சென்றபோது முதல் அலை காணப்பட்டது. அது இலங்கை அரசாங்கம் சில கடுமையான சட்டத்தை அமுல்படுத்தியதன் நேரடி விளைவாக அவர்களின் அந்த விரைவான வெளியேற்றம் ஏற்பட்டது.

1983இல் நாட்டின் இனக் கலவரத்தின் காரணமாக வெளியூரில் குடியேறியவர்களின் அடுத்த அலை ஏற்பட்டது. பெரும்பாலும் மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்குத் தொழில் வல்லுநர்கள் வெளியேறுவது பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்படும் இடம்பெயர்வின் மூன்றாவது அலையாகும்.

பல நாடுகளைப் போலவே இலங்கையும் பல ஆண்டுகளாக மனிதவள வெளியேற்றத்தினை அனுபவித்து வருகிறது. திறமையான மற்றும் படித்த தொழிலாளர்கள் வெளிநாட்டில் சிறந்த வாய்ப்புகளைத் தேடி நாட்டை விட்டு வெளியேறுவது இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது. மனிதவள வெளியேற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள், பொருளாதாரத்தில் அதன் எதிர்மறையான தாக்கங்கள் மற்றும் இந்தப் போக்கை மாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் குறித்துக் கூறுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

### மனிதவள வெளியேற்றம் ஏற்பட ஏதுவான காரணங்கள்

இலங்கையில் மனிதவள வெளியேற்ற நிகழ்வு பல காரணிகளின் விளைவாக இருக்கலாம்.

நாட்டில் போதிய வேலை வாய்ப்புகள் இல்லை - நாட்டில் வேலை வாய்ப்புகள் இல்லாதது குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் விரும்பிய வேகத்தில் வளர்ச்சியடையவில்லை. மேலும் தற்போதுள்ள தொழில் சந்தையில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறும் அனைத்துத் திறமையான தொழிலாளர்களுக்கும் இடமளிக்க முடியாது. இதனால், பல இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலை தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறைந்த சம்பளம் - மனிதவள வெளியேற்றம் பங்களிக்கும் மற்றொரு காரணம் குறைந்த சம்பளப் பிரச்சினை. மிகவும் திறமையான தொழிலாளர்களுக்கு கூட வளர்ந்த நாடுகளில் அவர்கள் சம்பாதிக்கக்கூடிய சம்பளத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சம்பளம் பெரும்பாலும் மிகவும் குறைவாகவே இருக்கும். திறமையான நபர்கள் சிறந்த நிதி வெகுமதிகளை வழங்கும் வாய்ப்புகளைத் தேர்வு செய்வதால் இந்த ஊதிய இடைவெளி சிறந்த திறமையாளர்களை ஈர்ப்பது மற்றும் தக்கவைத்துக்கொள்வது நாட்டிற்குச் சவாலாக உள்ளது.

### மனிதவள வெளியேற்றத்தின் எதிர் மறையான தாக்கங்கள்

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பங்களிப்பதற்கும் சில திறமையான பணியாளர்களே மிஞ்சியிருப்பதால் புலம்பெயர்வுக்கான இந்த மோகம் இலங்கையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது. மனிதவள வெளியேற்றம் இலங்கையின் பொருளாதாரத்தில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

முதலாவதாக, இது நாட்டிற்குள் திறமையான தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. இந்தப் பற்றாக்குறை வணிக நடவடிக்கைகளை மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றைத் தடுக்கிறது. கூடுதலாகத் திறமையான நிபுணர்களை பெரிதும் நம்பியிருக்கும் சுகாதாரம் மற்றும் கல்வி

போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் திறனை இது பாதிக்கிறது.

மனிதவள வெளியேற்றம் நிதி தாக்கங்களைக் கொண்டுள்ளது. திறமையான தொழிலாளர்கள் புலம்பெயர்ந்தால், அவர்கள் தங்கள் திறமைகளையும் நிபுணத்துவத்தையும் தம்முடன் எடுத்துச் செல்வதால், இலங்கைக்கான சாத்தியமான பொருளாதார நன்மைகளை இழக்க நேரிடுகிறது. இந்த நன்மைகள் புதுமை, உற்பத்தித்திறன் மற்றும் பல்வேறு தொழில்களுக்கான பங்களிப்புகள் மூலம் உருவாக்கப்பட்டிருக்கலாம். மனித மூலதனத்தின் வெளியேற்றம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை பாதிக்கிறது.

திறமைசாலிகள் வெளியேறுவதால் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய மற்றொரு எதிர்மறையான விளைவு என்னவென்றால் சர்வதேச நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்யாமல் இருக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

மேலும், அதிகமான இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற வழி தேடும் நிலையில், இலங்கையின் நிலைமையை யேமன் (Yemen) அல்லது சிரியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடலாம். அங்கு பெரும்பாலான மக்கள் வெளியேற விரும்புகின்றனர். உளவியல் அதிர்ச்சி மற்றும் வாழ்நாள் முழுவதும் மன அழுத்தத்திற்கு ஆளாகுவதால் தங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேறுகின்றார்கள்.

மேலும், மனிதவள வெளியேற்றம் இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. திறமையான தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறும்போது இலங்கை வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் உகந்த இடமாக இருக்காது என்ற செய்தியை சர்வதேச சமூகத்திற்கு அனுப்புகிறது. திறமையான நபர்கள் வெளியேறுவதால் சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச ஊடகங்களும் இலங்கை நாட்டினைக் குறைவான நிலையான தன்மையினையும் மற்றும் கவர்ச்சிகரமானதாகக் கருதுவதால், இந்தக் கருத்து வெளிநாட்டு முதலீடு மற்றும் சுற்றுலாவை எதிர்மறையாகப் பாதிக்கலாம்.

### அரசாங்க முயற்சிகள்

இலங்கை அரசாங்கம் மனிதவள வெளியேற்றப் பிரச்சினையை ஒப்புக் கொண்டதுடன், அதற்குத் தீர்வு காண சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உதாரணமாக, இலங்கையில் தங்கியிருப்பதை மேலும் கவர்ந்திழுக்கும் வகையில் பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கம் அதிகரித்துள்ளது. கூடுதலாகக் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கான நிதியுதவி அதிகரித்திருப்பது நாட்டிற்குள் திறமையான தொழிலாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### மனிதவள வெளியேற்றத்தினை எவ்வாறு கையாள்வது?

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனிதவள வெளியேற்றத்தினைத் திறம்பட மாற்றிய



மைக்க அரசாங்கம் விரிவான நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும்.

முதலாவதாக, அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாகத் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளைக் கூறலாம். இது திறமையான தொழிலாளர்களுக்கு கவர்ச்சிகரமான வாய்ப்புகளை வழங்குவதோடு நாட்டில் தங்குவதற்கும் அவர்களை ஊக்குவிக்கும்.

திறமையான தொழிலாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவது மற்றொரு முக்கியமான படியாகும். போட்டி இழப்பீடுகளை வழங்குவதன் மூலம் இலங்கை தனது சிறந்த திறமைகளை தக்கவைத்துக்கொள்ள முடியும், மற்றும் அவர்கள் வெளிநாட்டில் சிறந்த ஊதியம் பெறுவதை தடுக்க முடியும். இதற்கு இலங்கைக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் இடையிலான சம்பள இடைவெளியைக் குறைக்க ஓர் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படும்.

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதும் முக்கியமானது. கல்வி முறையை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய வேலைச் சந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர் திறமையான பணியாளர்களை இலங்கை உருவாக்க முடியும். நடைமுறைத் திறன்கள், தொழில்முனைவு மற்றும் தொழில்சார் பயிற்சி ஆகியவற்றை வலியுறுத்துவது வேலைவாய்ப்பை மேம்படுத்துவதோடு மனிதவள வெளியேற்றத்தையும் குறைக்கும்.

மேலும், இலங்கையில் வணிகங்கள் செயல்படுவதை எளிதாக்குவது மிகவும் முக்கியமானதாகும். அதிகாரத்துவச் செயல்முறைகளை நெறிப்படுத்துதல், தேவையற்ற கடின நடைமுறையினை உரியமுறையில் குறைத்தல், வணிக நட்புச் சூழலை உருவாக்குதல் ஆகியவை வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும். அத்தோடு வேலை உருவாக்கத்தைத் தூண்டும். இது திறமையான தொழிலாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திறமையாளர்களுக்கான கவர்ச்சிகரமான இடமாக இலங்கையை மாற்றும்.

மனிதவள வெளியேற்றம் இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கணிசமான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாகத் திறமையான தொழிலாளர்கள் இழப்பு, முதலீடு குறைதல், குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் வேலையின்மை அதிகரிப்பு என்பவை ஏற்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், சம்பளத்தை உயர்த்துதல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், வணிகத்திற்கு ஏற்ற சூழலை வளர்ப்பது ஆகியவை மனிதவள வெளியேற்றத்தை மாற்றுவதற்கான இன்றியமையாத படிகள் ஆகும். சம்பளத்தை அதிகரிப்பதற்கும் கல்வி மற்றும் பயிற்சியில் முதலீடு செய்வதற்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. ஆனால் இன்னும் விரிவான நடவடிக்கைகள் தேவை.

அரசியல் ஸ்திரத்தன்மை, நல்லாட்சி, பொருளாதார தேக்க நிலை போன்ற மனிதவள வெளியேற்றத்திற்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானதாகும். இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் திறமையான பணியாளர்களை ஈர்த்து, தக்கவைத்துக்கொள்ளும் சூழலை இலங்கை உருவாக்க முடியும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது. மேலும், வாழவும் வேலை செய்யவும் உகந்த இடமாக நாட்டின் நற்பெயரை உயர்த்துகிறது.

இடம்பெயர்வுக்கு எதிராக இளைஞர்களுக்கு கல்வி கற்பித்தல்

பல மக்கள் இடம்பெயர விரும்பும் போது மனித கடத்தல்காரர்கள் இலங்கையர்களை இடம்பெயரத் தூண்டுகின்றார்கள். ஆகவே, மனித கடத்தல்காரர்கள் இடம்பெயரும் இலங்கையர்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்கு அதிக அளவு கட்டணம் வசூலிப்பதன் மூலம் நிலைமையைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

மேலும் இடம்பெயர்வதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம், பிற நன்கொடை நிறுவனங்கள் மற்றும் இந்தியாவின் உதவியுடன் அனைத்து தொழிலாளர்களை ஈடுபடுத்தி, வேலைக்கு அமர்த்துவதற்கும் அவர்களின் திறமைகளைப் பயன்படுத்தி உட்கட்டமைப்பு மற்றும் வலுவான அமைப்புகளை உருவாக்குவதற்கும் தெளிவான திட்டங்களை உருவாக்க வேண்டும். இளைஞர்கள் தங்கள் நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய கடமைகள் மற்றும் புலம்பெயர்வதில் உள்ள அபாயங்கள் குறித்து தேசிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பரப்பப்பட வேண்டும்.

மனிதவள வெளியேற்றம் என்பது ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இதற்கு பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. அரசாங்கம் பல்வேறு உலக அமைப்புகளுடன் இணைந்து பயனுள்ள உத்திகளை உருவாக்கவும் செயற்படுத்தவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இலங்கையானது மனிதவள வெளியேற்றத்தின் எதிர்மறையான தாக்கத்தைத் தணித்து வலுவான மற்றும் வளமான பொருளாதாரத்திற்கு வழி வகுக்க முடியும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

நேர்கண்டவர் - ஞா.கவினி

"சிற்பங்களை செதுக்கும் இந்தக் கலை என்பது பரம்பரையாக எமது மூதாதையரிடம் இருந்து வந்திருந்தாலும், இந்தக் கலை மீது நாங்கள் கொண்ட ஆர்வமும் பற்றும் தான் தொடர்ச்சியாகச் சிற்ப கலையில் நாங்கள் பயணிப்பதற்கு வழி வகுத்திருக்கிறது. தற்போதைய காலகட்டத்தில் கோவில்களை விஸ்தரிக்கவும் புதிய தேர்களை உருவாக்கவும் பலர் ஆவலோடு இருக்கின்றனர். இவர்கள் இறைப்பணியோடு மாத்திரம் நின்று விடாது சமூகப் பணிகளோடும் தம்மை இணைத்துக் கொள்வது மிகவும் மகிழ்ச்சியான விடயம்"



# சிற்பக்கலை ஒரு தொழில் மட்டுமல்ல தன்னம்பிக்கையை விதைக்கும் பணி

## சிற்பக்கலைஞர் கதிர்றஞ்சன்

சிற்பக்கலைவாரிதி, சிற்ப நுண் கலைச் செம்மல், சிற்பகலாமணி, அதிவேக சிற்ப வேந்தன், தேர்ச் சிற்ப திலகம் என்று இன்னும் அனேகம் விருதுகளையும் பட்டப் பெயர்களையும் பெற்றிருந்தாலும் மிக எளிமையாகத் தனது சொல்லாலும் செயலாலும் சமூகத்திற்கு முன்னோடியாக விளங்குகின்றார் க.கதிர்றஞ்சன்.

தற்போது நாட்டில் சிற்பக் கலைஞர்களின் தேவை பெருகி வருகிறது. தொன்று தொட்டு எந்த காலப்பகுதிகளிலும் சிற்பக் கலைக்கு மிகுந்த மரியாதையும் முதலிடமும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. சிற்பக் கலையின் மூலம் உள்நாட்டு வர்த்தகத்தில் மாத்திரமன்றி வெளிநாட்டு வர்த்தகத்திலும் சிறந்து விளங்க முடியும் என்கிறார் கோகிலா சிற்பாலயத்தின் நிறுவுனர் சிற்பக் கலைஞர் சிற்ப நுண் கலைச்செம்மல் கதிர்காமநாதன் கதிர்றஞ்சன்.

### ஆரம்பம்

சிறு வயதில் பள்ளிக் காலத்திலிருந்து சிற்பக்கலை மீது எனக்குத் தீராத ஆவல் இருந்தது. பாடசாலை காலங்களில் பாடங்களை விடச் சிற்ப கலையின் மீது எனக்கு அதிக பற்று இருந்ததெனலாம். அப்போதெல்லாம் வகுப்பறையின் மேசைகள் மீது சிறு உபகரணங்களால் எனது கனவுகளை வரைந்து கொண்டிருப்பேன். இப்படியாக மிகவும் விருப்போடு சிறு வயதிலேயே ஆரம்பித்த இந்தப் பயணம் தான் என்னை இப்போது பொது வெளியில் பேசப்படக் கூடிய ஒரு சிற்ப கலைஞனாக மாற்றி இருக்கிறது என்று நினைக்கிறேன்.

உண்மையிலேயே சிற்பங்களை செதுக்கும் இந்தக் கலை என்பது பரம்பரையாக எமது மூதாதையரிடம் இருந்து வந்திருந்தாலும், இந்தக் கலை மீது நாங்கள் கொண்ட ஆர்வமும் பற்றும் தான் தொடர்ச்சியாக சிற்ப கலையில் நாங்கள் பயணிப்பதற்கு

வழி வகுத்திருக்கிறது. தற்போதைய காலகட்டத்தில் கோவில்களை விஸ்தரிக்கவும் புதிய தேர்களை உருவாக்கவும் பலர் ஆவலோடு இருக்கின்றனர். இவர்கள் இறைப்பணியோடு மாத்திரம் நின்றுவிடாது சமூகப் பணிகளோடும் தம்மை இணைத்துக் கொள்வது மிகவும் மகிழ்ச்சியான விடயம்.

மக்கள் தமது ஆன்மீகப் பயணத்தில் ஒன்றித்திருப்பதென்பது தீமையை வெல்வதற்கான ஒரு வழியாகும். தற்போது அனேகமாக புலம்பெயர் தேசத்து மக்களின் பங்களிப்பும் நிதி அனுசரணையும் இங்கு உள்ள மக்களது வாழ்வாதாரத்தில் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றதோ அப்படியே கோவில்களையும் தேர்களையும் மிளிரச் செய்கின்றது. இவ்வகையான அறப்பணிகள் மக்களின் சமூக சமய பண்பாடுகளிலும் அதிகம் தாக்கம் செலுத்துவதை காணக் கூடியதாக இருக்கின்றது .

### சவால்களும் சாதனைகளும்

பாரம்பரியத் தொழில் ஒவ்வொன்றிலும் சவால்கள் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்றுதான். ஆரம்பத்தில் நல்ல பணியாளர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் சவாலானதாகத் தான் இருந்தது. ஆனால் தற்போது பதினைந்து வரையான கலைஞர்கள் நம்முடன் இருக்கிறார்கள். ஆனால் இன்னும் தேவைப்பாடு அதிகமாக இருக்கின்றது. இங்குள்ள பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக தற்போது இந்தியாவில் இருந்தும் சிற்பக் கலைஞர்களை அழைத்து வேலை செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் அனேக கலைஞர்களுக்கான தேவை நம்மிடம் இருக்கிறது.

இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் எமது உற்பத்திப் பொருட்களை



ஏற்றுமதி செய்வதோடு இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள கோவில்களின் தேர்களையும் சிற்பங்களையும் உருவாக்கி கொடுக்க



கூடிய சந்தர்ப்பங்களும் அமைந்ததையிட்டு இந்த நேரத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். இதனால் அங்குள்ள நல்ல மனிதர்களின் நட்புகளையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்தத் தொழிலைப் பொறுத்தவரை நேர்மையும், நேரம் தவறாமையும், அர்ப்பணிப்பும் மிக முக்கியமானவை.

இவை ஒவ்வொருவருக்கும் நல்ல தொழில் வாய்ப்பை மாத்திரமன்றி வாழ்வில் மிக நல்ல மனிதர்களையும் சம்பாதித்து கொடுக்கிறது. ஆரம்பத்தில் முகநூல் வழியாகவும் நண்பர்கள் வழியாகவும் தொழில்களைப் பெற்றுக் கொண்டாலும் தற்போது அநேகம் வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதற்கும் வெளிநாட்டுப் பணத்தை நாட்டிற்கு கொண்டு வருவதற்கும் இவையே ஏதுவாக அமைந்திருக்கின்றன.

சிற்பக்கலைவாரிதி, சிற்ப நுண் கலைச் செம்மல், சிற்பகலாமணி, அதிவேக சிற்ப வேந்தன், தேர்ச் சிற்பத் திலகம் என்று இன்னும் அனேகம் விருதுகளையும் பட்டப் பெயர்களையும் பெற்றிருந்தாலும், வேலை நிறைவடைந்தவுடன் இருக்கும் ஆத்ம திருப்தியும் சந்தோஷமும் அடுத்த கட்ட நகர்விற்கான உற்சாகத்தை அளிக்கின்றது. வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையும், அன்பும் தான் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கான அத்திவாரமாக அமைகின்றது. எந்தத் தொழிலை செய்பவர்களாக இருந்தாலும் நேர்மையும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களால் வெற்றி பெற முடியும்.

தொன்று தொட்டுக் கோவில் விக்கிரகங்களையும் தேர்களையும் உருவாக்கி வரும் சிற்ப கலைஞர்களை உருவாக்கும் பள்ளிகளும் குருகுலங்களும் இந்தியாவில் அதிகளவாக இருந்தாலும், இலங்கையைப் பொறுத்த வரையில் அவை மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அவரவர் தத்தமக்குத் தெரிந்த குருக்களிடம் இக் கலையை பயின்று தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். பாரம்பரியமான எமது கலைகளும் கைத்தொழில்களும் சமூகத்தைக் கட்டி எழுப்பும் வல்லமை வாய்ந்தன.

அதிலும் இலங்கையில் மருவிக்கொண்டிருக்கும் சிற்பக் கலையினை தகுதியானவர்கள் கற்றுக்கொள்வதற்கு வழிவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் அதிகாரத்தில் உள்ளவர்களது கடமையாகும். சிற்பக்கலை என்பது ஒரு தொழில் மாத்திரமன்றி ஆத்ம திருப்தியையும் தன்னம்பிக்கையையும் மக்களிடம் விதைக்கும் மிகப்பெரிய பணி.

### கனவுகள்

கற்று முடியாத ஆழ்கடல் போன்றது இந்தக் கலை. ஒவ்வொரு கலைஞனுக்கும் தனது கலையில் மிகச்சிறந்து விளங்க வேண்டும் என்பது கனவாக இருக்கும். அத்தோடு இலங்கையில் இன்னும் பலருக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், முடிந்த அளவு சமூகப் பணிகளை செய்ய வேண்டும் என்றும் நினைக்கிறேன். கலைஞன் என்பவன் தனது ஊதியத்திற்கு அப்பால் சமூகத்தை நேசிக்கும் ஒருவனாக இருக்கிறான்

### ஆலோசனைகள்

சிற்பக்கலை மாத்திரமன்றி எவ்வித மான தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும்



நேர்மையும் ,நேரம் தவறாமையும், அர்ப்பணிப்புடனான தன்னம்பிக்கையும் உங்களை வெற்றியின் உயரத்திற்கு அழைத்துச் செல்லும். பலராலும் மறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நமது பாரம்பரியக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் மூலம் பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்வதென்பது ஆத்ம பலமும் மகிழ்ச்சியுமானது.

இறைவனுக்குத் தொண்டு செய்வதோடு மனிதர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் நான் எனது குடும்பத்தினருக்கும் என்னோடு இணைந்து பணியாற்றுபவர்களுக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். எப்போதும் எனக்கு ஒத்தாசையாக இருக்கும் இவர்களால்தான் இந்த வெற்றிகள் எனக்கு சாத்தியமாயிற்று. கலைகளும் கைத்தொழில்களும் எப்போதும் எம்மைக் கைவிடாதவை" என்று அவர் தெரிவித்தார்.



# சிக்கனம்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

வாழ்க்கையில் சிக்கனமாக இருப்பவர்களைப் பொதுவாகக் கஞ்சர்கள் என அழைப்பதுண்டு. ஊருக்குள் அப்படி சில பேர் இருப்பதுண்டு.

கஞ்சத்தனமாக இருப்பவர்கள் பேச்சில் வள்ளல்தனம் துள்ளி விளையாடும். எங்கள் கிராமத்தில் அப்படி ஒருவர் இருந்தார். பாவம் அவருக்குப் பிள்ளைகளும் கிடையாது. அவரது தங்கையின் பிள்ளைகளுக்காகவே அவர் உழைத்து சேர்த்தார். அவரைப்பற்றி ஒரு சொல்லடை இருக்கிறது. மிக அழகாக நளினமாக அதை பேசிக்காட்டுவார்கள்.

“ஆத்தே அவன்பாவி ஆர் போய் ஆபத்து அந்தரமெண்டு கேட்டாலும், இல்லையெண்டு சொல்ல மாட்டான். ஆனாக் குடுக்கவும் மாட்டான்.”

அவரிடம் உதவி கேட்பவர்கள் அவரைத் தேடி வீட்டுக்கு அலைவதில் நாட்கள் கடந்து அவர்களது பிரச்சினையும் இல்லாது போய் விடும். நீங்களே கவனித்திருப்பீர்கள். பிரச்சினைகளில் அல்லாடாத மக்கள் யார்? அவர்களுக்குத் தேவையான பணமோ உதவியோ அதைத்தேடி அலைந்து திரிவார்கள். நாட்கள் செல்லச்செல்ல பணம் கிடைக்கிறதோ அல்லது உதவி கிடைக்கிறதோ இல்லையோ பிரச்சினைகள் தீர்ந்து விடும். இதுதான் இயற்கை. உண்மையில் அந்த உதவிகள்கூட தாமாகவே உரிய நேரத்தில் வரும். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனம் உள்ளவரானால் எமக்கான உதவியை இயற்கை எங்காவது மறைத்து வைத்திருக்கும். அது அப்போது வரும். எனது எழுபது வருட வாழ்க்கையில் அனுபவித்த பாடம் இது. திருப்பாசுரம் ஒன்றுண்டு.

“துப்புடையாரை அடைவது எல்லாம் சோர்விடத்தது

> ‘வங்கிக் கடன் நுண்கடன், தனியாரிடம் பெறும் கடன் என மக்களை கடன் என்ற பசாசு பிடித்தாட்டுகிறது. மற்றவர்களின் முன் கௌரவமாக வாழ்வதாக காட்டிக் கொள்ளப் பலர் வீடு வாகனம் எல்லாமே கடனில் வாங்கிப் போட்டிருக்கிறார்கள்.’

துணையாவர் என்றே “ஒப்பிலேன் ஆகிலும் உன்னை அடைந்தேன்”

யானைக்கு நீ அன்று அருள் செய்த மையால்

எய்ப்பு எனைவந்து நலியும்போது அங்கு ஏதும் உனை நினைக்க மாட்டேன்.

அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்

அரங்கத்து அரவணைப் பள்ளியானே ஆம் எனக்குத் துன்பம் வரும்போது உன்னை நினைக்காம விட்டுடுவேன். ஆனாலும் அப்போதைக்கு இப்பவே சொல்லி வைக்கிறேன். என்று கிருஸ்ணனுக்குச் சொல்லி வைத்தார் ஒரு ஆழ்வார்.

இதுதான் நாங்கள் முன்னே செய்தவை எம்மை வந்து சேரும் என்ற தத்துவமும் சொல்வது.

நாம் எதையும் சிக்கனமாக உபயோகிக்கவும் சிக்கனமாகச் செலவழிப்பதற்கும் முடியாத நிலையில் இருக்கிறோம். அடாவடியான செலவுகள் எம்மை அநாமதேயங்களாக வந்து தாக்குகின்றன.

கடைத்தெருவுக்கு புறப்படுமுன் அந்தப் பயணம் இப்போது அவசியம்தானா? என சிந்திப்போம். நாம் வாங்க எண்ணியிருக்கும் பொருள் இன்றைக்கு முக்கியமா? அதை நாளைக்கு வாங்கினால் என்ன என்பது போன்ற கேள்விகளை எமக்குள் எழுப்பிப் பார்த்தால், சிலநேரங்களில் நாம் அடுத்த வாரமளவில்தேவைப்படப்போகின்ற பொருளையும் இன்றைக்கு வாங்குகிறோம் என்பது தெரியவரும்.

கொஞ்சம் பயறு கிடந்து வண்டடிச்சுப் போட்டுது எனவும் மா வாங்கிக் கனநாள் அதை நல்லா அரிக்க வேணும் என்றோ வெங்காயத்தைக் கனக்க வாங்கி அது அழுகிது என்போரும். குளிர்பதனப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டு அதை நிரப்பப் பழங்களையும் மரக்கறிகளையும் வாங்கி அதில் அடைவோரும் அதிகரித்துள்ளனர். குளிர்பதனப் பெட்டியில் வைத்தாலும் கத்தரிக்காய் பழுதடையும். அதை விளைவிப்பவர்கள் ஏற்கெனவே அதற்கு நஞ்சூட்டி வைத்திருக்கிறார்கள்.

அடிக்கடி கடைக்குப்போக இயலாது என்பதால் வாங்கிக் குவிப்பவர்கள் அடிக்கடி கடைக்குப் போகாதவர்கள்தான். எமக்கு பலகாலமாக ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. ஏதாவது ஒரு பொருள் தட்டுப்பாடாக வரப்போகிறது என்ற செய்தியை ஊகித்தால் அதை முழுக்கடைகளிலும் அலைந்து திரிந்தாவது தேவைக்கு மேல் வாங்கி வீட்டை நிரப்பி வைப்பது.

கொரோனா பரவியபோது கடைகள் ஒளிகடைகளாக விளங்க, பண மில்லாதவர்கள்கூட கடன்பட்டோ நகை நட்டுகளை அடகுவைத்தோ விடு நிரம்ப பொருட்களை கொள்வனவு செய்து வைத்தனர். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தினர் கொரோனா சற்று அடங்குமுன் அவர்கள் கொள்வனவு செய்த உருளைக்கிழங்கு உள்ளி, வெங்காயம் போன்றவற்றை நட்டுப்பராமரிக்க வேண்டியதாயிற்று. அவை முளைவிடத் தொடங்கிவிட்டன.


அதே போல அநேகமான வீடுகளில் பெற்றோல் சேமிக்கப்பட்டு அவை இன்னும் தீராமல் இருப்பதைக் காண முடிகிறது.

இந்தச்செயல்கள் ஒரு தட்டுப்பாட்டை வலிந்து உருவாக்கி தாமும் நட்டமடைந்து நாட்டையும் நட்டத்துக்குள்ளாக்கும் செயல்கள்தான். பொருளாதார ரீதியாக சில பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் போகின்றன என அறிந்து தாமே முழுப் பொருட்களையும் கொள்வனவு செய்து அவை வீட்டில் கிடந்தே காலாவதியாகி நட்டமடைவோரும் உள்ளார்கள். அவர்களிடம் சிக்கனம் பற்றி நாம் சொன்னால் சிரிக்கத்தான் செய்வார்கள்.

அன்றாடம் தேவையான பொருட்களை மட்டுமே வாங்குவது என நான் முடிவெடுத்தபின் எனது மாதச் செலவு மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது. அப்படி குறைந்துள்ள தொகையை நான் வங்கியொன்றின் முதலீட்டுச் சேமிப்பில் போட்டு வைக்கிறேன். இதுவும் ஒரு வகையில் நட்டம்தான்.

இந்தச் சேமிப்பில் நாம் ஒரு குறித்த தொகையை மாதாமாதம் சீட்டுக்கட்டுவது போல வங்கியில் வைப்பிலிடுவோம். முப்பத்தாறு மாதங்களின் பின் அந்த கணக்கு முதிர்வடையும்போது நாம் கட்டிய தொகைக்கு ஒரு கணிசமான வட்டி போட்டு வங்கி திருப்பித் தருகிறது. உதாரணமாக நான் மாதாமாதம் ஆறாயிரம் ரூபா கட்டினால் முப்பத்தாறாவது மாதத்தில் எனது கட்டுப்பணம் இரண்டு இலட்சத்து பதினாறாயிரம் தானே. அதை இரண்டு லட்சத்து ஐம்பதாயிரமாக வங்கி திருப்பித் தரும். ஆனால் அந்தக்காலத்தின் பின் என் தொழிலுக்கான ஒரு முதலீடு கையில் வரும்போது அது எனது மாதச்செலவுகளாகப் போயிருக்க வேண்டிய பணந்தான் என்பது ஆச்சரியமாக இருக்கும்.

இப்போது நீங்கள் ஒன்றைக் கவனியுங்கள். இதையே நீங்கள் முன் பணமாக அதாவது கடனாக வங்கியில் பெற்றிருந்தால், இப்போது மாதாமாதம் இதே தொகைக்கு வட்டி மட்டும் நீங்கள் கட்டிக் கொண்டிருப்பீர்கள். அதாவது நீங்கள் மாதாந்தம் கட்டும் பணம் கடன் தொகையை எவ்விதத்திலும் குறைக்காது. அது அந்தக் கடனின் வட்டியாக மட்டுமே இருக்கும். உங்கள் ஆயுட்காலம் முடிந்தாலும் கடன் நிலைத்திருக்கும். கடன்பட்டவர்களைக் கேட்டுப்பாருங்கள். வீட்டுக்கடனோ மாட்டுக்கடனோ எத்தனை வருடங்களாக கட்டுகிறார்கள் என்று. உங்களுக்கு ஒன்று தெரியும். அனுமதி பெற்ற கடன் கொடுப்பாளர்களின் கடன் தொகையாக செலுத்திய பணத்தை கடனாளியிடமிருந்து வசூலிக்கும் போது. அதன் வட்டியானது. முதலை மிஞ்சியதாக இருத்தலாகாது. ஏன்று சட்டமே இருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் இருக்கிறதா தெரியவில்லை.



வங்கிக் கடன் நுண்கடன், தனியாரிடம் பெறும் கடன் என மக்களைக் கடன் என்ற பசாசு பிடித்தாட்டுகிறது. மற்றவர்களின் முன் கௌரவமாக வாழ்வதாக காட்டிக் கொள்ள பலர் வீடு வாகனம் எல்லாமே கடனில் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். எனது தமிழில் சொல்வதானால் ‘மூலை வேலிக்க கிடக்கிற கந்தோருக்கு போக கார் வாங்கி வைத்திருக்கும் ஒருவர் அதை வாரம் ஒருதடவை யாவது வெளியே எடுக்கிறாரா தெரியவில்லை. அதற்கு புதுச்சட்டை மாட்டிப் பக்குவமாக வைத்திருக்கிறார். அவரது சம்பளத்தில் பெரும் பகுதி கடனுக்குப் போகிறதாம். அதனாலென்ன அவர் மகிழ்ச்சியாகவே இருக்கிறதாகக் காட்டிக் கொள்கிறார். சிக்கனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வழிமுறைகளைக் கண்டிப்பாக அவர்கள் கடைப்பிடிக்கவில்லைத்தான். ஆனால் அந்த சிக்கன வாழ்க்கை அவர்கள் மீது இப்போது வலிந்து திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வேறு வழியில்லை.

“வீட்டுக்குள்ள நாங்கள் சாப்பிடுறமா இல்லையா? என்பது மற்றவைக்கு தெரியப் போறதில்லை. ஆனா வெளிக்கிட்டு வெளியில போனா மரியாதையாத்தான் போக வேணும்.” இப்படித்தான் இன்று அநேகர் அரிதாரம் பூசிய தொழுநோயாளர்களாக இருக்கிறார்கள்.

# அதிக இலாபம் பெறும் வகையில் மிளகு பயிரிடுவது எவ்வாறு?



சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே மிளகு நமது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மிளகினை கறுப்புத் தங்கம் என்றும் ஒரு சிலர் அழைப்பார்கள். காரணம். பெறுமதி மிக்க ஒன்றாகவும் அதிகமான உணவு ஆகும். பண்டங்களில் சேர்க்கப் படுவதனாலும மிளகின் தாயகம் தென் இந்தியா ஆகும்.

இலங்கையில் கூட ஆட்சி செய்ய வந்த போர்த்திக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கூட மிளகினை உற்பத்தி செய்து தங்க ளுடைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார் கள்.

மிளகு என்பது செடி அல்ல, அது ஒரு கொடி. சிவப்பு, இளஞ்சிவப்பு, பச்சை, கறுப்பு, வெள்ளை என்று வெவ்வேறான வண்ணங்களில் இருக்கின்றது.

பழுக்காத மிளகைப் பறித்தால் பச்சை யாக இருக்கும்.

நன்கு பழுத்துக் காய்ந்தது கறுப்பு நிற மாக வரும். இப்படி பறிக்கும் நாள்களைப் பொறுத்து அதன் வண்ணங்களும், அதன் தரமும் மாறுபடுகின்றன.

மிளகு நடுகை செய்ய விரும்பினால்

> மிளகு நடுகை செய்ய விரும்பினால் உங்கள் இடத்திற்கு ஏற்ற இரகத்தினை உங்கள் இடத்தில் உள்ள விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையோடு தேர்வு செய்ய வேண்டும். இதில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய இரகம். மற்றும் இதமான காலநிலையில் வளரக்கூடிய ரகம். மற்றும் குளிர் பிரதேசங்களில் வளரக்கூடிய ரகங்கள் என வெவ்வேறு இரகங்கள் உள்ளது.

**ஆனந்தன் பிரேம்நாந்**
**லக்சி பண்ணை**



உங்கள் இடத்திற்கு ஏற்ற இரகத்தினை உங்கள் இடத்தில் உள்ள விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையோடு தேர்வு செய்ய வேண்டும்.

இதில் வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய இரகம்.

மற்றும் இதமான காலநிலையில் வளரக்கூடிய இரகம்.

மற்றும் குளிர் பிரதேசங்களில் வளரக் கூடிய இரகங்கள் என வெவ்வேறு இரகங் கள் உள்ளது.

மிளகிற்கு நிழல் மிகவும் அவசியம். எனவே இதனை தனி பயிராக நடுகை செய்ய முடியாது.

எமது காலநிலைக்கு ஏற்ற இரகங்களை கமுகு மற்றும் தென்னந் தோட்டங்களில் வளர்த்தால் அதிக விளைச்சலை பெறமுடி யும். உங்கள் பண்ணைகளில் கால்நடைக் காக வளர்க்கப்பட்ட கிளிசிறியா மரங்களோ டும் நடலாம்.





பொதுவாக மிளகை ஜூலை - டிசம்பர் மாதங்களில் பயிரிடலாம். இதனை மானா வாரியாகவும் பயிர் செய்யலாம்.

மிளகு நல்ல வடிகால் வசதியுள்ள செம் மண்ணில் நன்கு வளரும் தன்மை கொண் டது. மாறாகக் களிமண் பூமியிலும், மணற் பாங்கான நிலங்களிலும் இப்பயிர் நன்கு வளராது. மண்ணின் கார அமிலத் தன்மை 5.5 முதல் 6.6 வரை இருந்தால் நல்லது.

மிளகுப் பயிர் கொடிதுண்டுகள் மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது.

கொடியினைத் தாய்ச்செடியிலிருந்து எடுத்து 2 அல்லது 3 கணுக்களுடன் கூடிய சிறு துண்டுகளாக வெட்டி பொலித்தீன் பைகளில் நடவு செய்து வேர் பிடித்த பின்பு இந்தத் துண்டுகளை நடுகைக்குப் பயன் படுத்தலாம்.

தென்னை மரம் என்றால், ஒரு மரத் துக்கு இரு கன்றுகள் வீதமும், பாக்கு மரம் என்றால் ஒரு மரத்துக்கு ஒரு கன்று வீதமும் கிளிசரியா மரமாக இருந்தால் ஒரு கன்று வீதம் மிளகை நடவு செய்ய வேண்டும். மிளகுக் கொடிகள் இந்த மரங் களைப் பற்றிக் கொண்டு வளர்ந்துவிடும்.

தென்னையின் அடிப்பகுதியில் வேர் கள் இறுக்கமாக இருக்கும் என்பதால், மரத்திலிருந்து இரண்டரை முதல் மூன்று அடி தூரம் தள்ளி மிளகுக் கன்றுகளை



நடவு செய்ய வேண்டும்.

அதேசமயம் கொடிகள் மரத்தை எட்டிப் பிடிக்க, ஏதுவாகச் சிறு குச்சிகளை அருகில் ஊன்றி வைக்க வேண்டும். கொடிகள் தென்னை மரத்தில் படர ஆரம்பித்தபின் அவற்றை எடுத்துவிட்டு தரையோடு தரை யாகக் கொடியை வைத்து, மண்ணால் மூடி மரத்துக்கு அருகில் இருந்தே கொடி முளைத்து ஏறுவது போல் செய்ய வேண் டும். இதனால் மண்ணுக்குள் இருக்கும் கொடிப்பகுதியில் புதிய வேர்கள் உருவாகும்.

மிளகு நட்டவுடன் நீர்ப் பாய்ச்ச வேண் டும். பின்னர் 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் அதிகம் பாய்ச்சுவதும் ஆபத்தானது. ஏனெ னில் கொடிகள் செழிப்பாக வளர்ந்தால் காய்க்கும் திறன் குறைவாக இருக்கும். இது நிழல் பகுதியில் வளர்வதால் தண்ணீர் தேவையை உணர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதே நேரம் நீர் தேங்காத வாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான அளவு ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகாவியா போன் றவற்றைப் பயன்படுத்தலாம் ஒரு வருடத் திற்கு, ஒரு கொடிக்கு நன்கு மக்கிய தொழு உரம் 5 கிலோ அல்லது மண்புழு உரம் 5 கிலோ என்ற அளவில் மே - ஜீன் மற்றும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் மண் ணில் இட வேண்டும். உதிர்ந்த இலை களை மூடாக்காகப் போட வேண்டும். அதுவே சிறந்த உரமாக மாறிவிடும்.

இதுவே கிளிசரியா மரத்தோடு நடப்பட்டி ருந்தால் உதிர்ந்து விழும் கிளிசரியா இலைகள் ஊடாக மிளகுச் செடியானது தமக்குத் தேவையான நைட்ரஜனை எடுத் துக் கொள்ளும்.

நட்டு ஒரு வருடத்தில் மிளகுக் கொடிக ளின் நுனியைக் கிள்ளி விடுவதன் மூலம் பக்கக் கிளைகள் அதிகமாக வளரும். மிளகுக் கொடி மரங்களின் உயரத்தைத் தொடும் அளவிற்கு வந்தவுடன், மேலும் பற்றிப்படர மரம் இல்லாததால் கொடிகள் கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும் போது அவற்றை அப்புறப்படுத்தித் தண்டு களை நாற்றுக்களாக உற்பத்தி செய்யப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மற்றப் பயிர்களோடு ஒப்பிடும்போது மிளகை நோய்கள் தாக்குவது மிகக்குறைவு. இருப்பினும் நோய்த் தாக்கம் வரும்பட்சத் தில் இயற்கை முறையிலான கற்பூரக் கரைசல் அல்லது மூலிகைக் கரைசல் அல் லது அக்கினி அஸ்திரா போன்ற கரைசலை பயன்படுத்தலாம்.

மிளகு நட்ட மூன்றாம் ஆண்டில் காய்க்கத் தொடங்கி ஆறு ஆண்டுகளில் கொடிகள் நல்ல விளைச்சல் கொடுக்கத் துவங்கும். மிளகு பூக்க ஆரம்பித்த பின் 6 முதல் 7 மாதங்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும்.

சமவெளிப் பகுதிகளில் அறுவடைக் காலம் நவம்பர் முதல் ஜனவரி வரை இருக்கும். மலைப்பகுதிகளில் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை இருக்கும். நன்கு முற்றிய மிளகுக் காய்களைப் பழுப் பதற்கு முன்பே அறுவடை செய்ய வேண் டும். கைகளினால் அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடை செய்த காய்களை 80 - செல்சியஸ் கொதி நீரில் 1 நிமிடம் மூழ்க வைத்துப் பின்னர் நன்கு வடிகட்டி எடுத்து 7 - 10 நாட்கள் சூரிய ஒளியில் உலர்த்த வேண்டும். காய்களை அவ்வப்போது கிளறி விட வேண்டும். காய்களை கிளறா மல் விட்டால் பூஞ்சாண வளர்ச்சி ஏற்படும். இதனால் மிளகின் தரம் குறைந்து சந்தைப் படுத்தல் மேற்கொள்ள முடியாது போகும். அதோடு மிளகானது நன்றாகக் காய்ந்து இருந்தால் இலகுவில் பழுதடையாது ஐயம் இன்றிக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க லாம்.

ஒரு வருடத்திற்கு ஒரு கொடியிலிருந்து 2 முதல் 3 கிலோ உலர்ந்த மிளகு கிடைக் கும். மிளகின் விலை பற்றியும் சந்தை வாய்ப்பு பற்றியும் நாங்கள் கூற வேண்டிய



அவசியம் இல்லை. மிளகைப் பொறுத்த வரை கறுப்புத் தங்கம் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை நன்கு அறிவீர்கள்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784
WhatsApp:0769196445

# கம்பனிகளும் கம்பனிகளை பதிவு செய்வதற்கான நடைமுறைகளும்




**ஜெபராஜ் ரெஹோபயாம்**
**திட்ட அலுவலர்**
**வர்த்தகத் தொழில்துறை மன்றம்**
**யாழ்ப்பாணம்.**

> “ பொருத்தமான கம்பனிப்பெயரைத் தெரிவுசெய்த பின்னர் விண்ணப்பதாரி குறித்த திணைக்களத்தின் தகவல் கூடத்திலிருந்து ஏ 16 விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் அவ்வாறு இல்லாவிடின் திணைக்களத்தின் இணையத் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ”

ஒரு தொழில்முயற்சியாளன் இலங்கையில் ஒரு வர்த்தகத்தை ஆரம்பிக்கின்றபொழுது அதை எந்த வகையான வியாபாரமாக பதிவுசெய்வது? அதைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் என்ன என்பது பற்றிய புரிதலை கொண்டிருத்தல் அவசியமாகின்றது. அது பற்றிய விளக்கத்தை நாம் இத்தொகுப்பின் மூலம் அறிந்து கொள்வோம்.

**கம்பனி**

கம்பனி என்பது இலாபத்தை நோக்காக கொண்டதும் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டதும் பங்குதாரர்களுக்குச் சட்டரீதியாக பாதுகாப்பளிக்கின்ற வேறுபட்ட நபராக கருதப்படும் வியாபாரம் ஆகும்.

கம்பனி ஒன்றின் உரித்து பங்காளர்களுடையதும் நிர்வாக நடைமுறைகள் ஆளுனர் சபைக்கு உரியதும் ஆகும்.

கம்பனிகள் முக்கியமாக மூன்று வகைப்படுகின்றன:

1. பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (Company limited by shares) - பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் இரு வேறு பிரிவுகளாக அடையாளப் படுத்தப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் (private limited company) மற்றும் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள், (public limited company )

2. வரையறுக்கப்படாத கம்பனிகள் (unlimited company)

3. உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் ( company limited by guarantee).

**வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி**

கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அடிப்படையில் வேறான அடையாளத்தை கொண்டதும் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டதும் ஆகும். பங்குச்சந்தையில் கம்பனியின் பங்குகள் பொதுமக்களுக்கு வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டநிலையில் கம்பனியின் பங்குதாரர்கள் 50 பேருக்குள் வரையறுக்கப்பட்டு ஆகக் குறைந்தது ஒரு பணிப்பாளரும் செயலாளரும் இரண்டு பணியாளர்களும் இருக்கவேண்டிய கம்பனிகள் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகும்.

இவ் வகையினுள் பதிவு செய்வதில் நன்மைகளும் அதேநேரம் தீமைகளும் உண்டு அதாவது மேலே குறிப்பிட்டது போல் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் வேறான சட்ட அடையாளங்களைக் கொண்டுள்ளமையால் சட்டத்தின் பார்வையில் உரிமையாளரும் நிறுவனமும் வேறு வேறாகக் கணிக்கப்படுகின்றது.

நிறுவனத்திற்குக் கடன்கள் அல்லது பயங்கரமான நிதி இழப்புக்கள் ஏற்பட்டால் அல்லது வழக்குத் தொடரப்பட்டால் உரிமையாளர்கள் முழுப்பொறுப்பேற்க மாட்டார்கள். அவர்களது சொந்த வீட்டினையோ அல்லது நிலங்களையோ அல்லது சொந்த சொத்துக்களையோ இழப்பிற்காக ஈடுகட்ட வேண்டிய அவசியமில்லை என்பது இதன் அர்த்தமாகும், வரையறுக்கப்பட்ட நிறுவனமாகப் பதிவு செய்யும்பொழுது நிறுவனத்திற்கான கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந் நடவடிக்கையானது நிறுவனத்திற்கு வணிகரீதியாக வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக வர்த்தகத்தில் ஈடுபடுவது இயல்பாகவே தொழில்சந்தையில் ஒரு சிறந்த தரத்தை உருவாக்குகின்றது. அதனால்தான் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் தனிவியாபாரத்தை விட உயர்ந்த நிலையில் கணிக்கப்படுகின்றன. ஒரு தனியார் கம்பனியின் நிதித் தகவல்களை வெளியிடுவது பொதுக் கம்பனிகளை விட ஒப்பீட்டளவில் இலகுவானதாகும்.

தீமையைபொறுத்தவரையில் தனியார் மற்றும் பங்குடமை வியாபாரங்களை விட அதிக வர்த்தகக் கட்டமைப்பும் மற்றும் சட்ட ஏற்பாடுகளும் உண்டு. வியாபாரத்தின் ஒவ்வொரு நடைமுறைக்கும் கடுமையான கணக்கியல் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும், பொதுக் கம்பனிகள் போன்று வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் தங்கள் பங்குகளைப் பங்குச் சந்தையில் விற்கமுடியாது. அதற்குப் பதிலாகப் பங்குதாரரிடமிருந்து மூலதனத்தைத் திரட்ட முடியும். ஆனால் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளில் ஆகக் கூடுதலாக 50 பங்குதாரர்களே இருக்க முடியும் என்பதால் வெளி முதலீட்டாளர்களை ஈர்க்கும் உங்கள் திறனைக் கட்டுப்படுத்தும் எனலாம்.

### வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள்

இவ்வகைக்கம்பனிகள் மட்டுப்படுத்தப்படாத பங்குதாரர்களால் முதலீடு செய்யக்கூடியன. ஆகக்குறைந்தது 7 பங்குதாரர்களும் 2 ஆளுனர்களும் இதற்கு அவசியம். பங்குச்சந்தையில் பங்குகளைப் பட்டியல் படுத்தவும் அவற்றைப் பொதுமக்களுக்கு விற்பனைசெய்யவும் முடியும். அதாவது பொதுமக்கள் கம்பனியின் சொத்தையும் இலாபத்தையும் உரித்துடையதாக்கலாம்.

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளைப் போலவே உங்களுக்கு சொந்தமான பங்குகளின் மதிப்புக்கு நீங்களே பொறுப்புள்ளவர்கள்,வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளை வைத்திருப்பதன் மிகப் பெரிய நன்மை என்னவெனில் மூலதனத்தை உயர்த்தும்போது எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதில்லை மற்றும் நீங்கள் பங்குச் சந்தையில் பகிரங்கமாக வர்த்தகம் செய்யலாம் என்பதால் வெளிதரப்பினர் உங்கள் பங்குகளை வாங்குவதன் மூலம் முதலீடு செய்யலாம். இதனால் நிறுவனம் பெரிய அளவிலான மூலதனத்தை திரட்ட முடியும் மற்றும் பொது நிறுவனத்தில் பங்குகளை மாற்றுவது தனியார் நிறுவனத்தை விட இலகுவானது.

பாதகமான விடயம் என்னவெனில் மூலதனத்தைத் திரட்டுவதற்காக பொது மக்களை அணுகுவது மிகவும் செலவு கூடியதாயிருக்கின்றது. பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளைப் பொறுத்த வரையில் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பது அவசியமாகும். மேலும் உங்கள் பங்கு மதிப்பு நிறுவனத்தின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டது அதாவது சந்தை உங்களை எப்படி பார்க்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இது தீர்மானிக்கப்படுகின்றது. மற்றும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளை நடாத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் கடுமையான விதிமுறைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது

### வரையறுக்கப்படாத கம்பனிகள்

வரையறுக்கப்படாத கம்பனிகள் என்றால் என்னவெனில் கம்பனிகளின் அதிகார சட்டத்தின்படி கம்பனிகளின் பங்கு, மூலதனம் மற்றும் பங்குதாரர்களின் பொறுப்புக்கள் வரையறுக்கப்படாத கம்பனிகள் ஆகும். இங்கு கம்பனியின் பங்குதாரர்கள் அல்லது அங்கத்தவர்கள் கம்பனியின் ஆதனத்திற்கு மேலாக வரையறுக்கப்படாத பொறுப்புக்களைக் கொண்டிருப்பார்கள்.

### பொறுப்புக்களால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

தொடர்ந்து பொறுப்புக்களால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் என்கிறபொழுது நாங்கள் முன்பு ஆராய்ந்த வணிக வகைகளை விட சற்று தனித்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது அதேநேரம் இந்த நிறுவனம் பொது நிறுவனங்கள் போன்று பங்குகளை வெளியிடுவதில்லை. மாறாக உத்தரவாதம் அளிப்பவர்கள் போல செயல்படும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. உத்தரவாளர்கள் நிறுவனங்களின் கடன்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த ஒப்புக்கொள்கிறார்கள். இருப்பினும் அவர்களுக்கு நிறுவனத்தில் பங்குகள் இல்லை. இந்த வகை நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்ட முடியாது. ஏனெனில் அதன் முக்கிய நோக்கம் சமூகத்திற்கு சேவை செய்வதே ஆகும். உருவாக்கப்படும் இலாபமானது பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படமாட்டாது மாறாக இவ் இலாபமானது நிறுவனத்தின் இலாப நோக்கற்ற நோக்கங்களுக்காக மீள முதலீடு செய்யப்படும். பங்குதாரர்கள் இலாபத்தைப் பகிர்ந்து கொண்டால் நிறுவனம் அதன் தொண்டு நிலையை இழக்கும்.

இவற்றின் நன்மைகளை எடுத்து நோக்குகையில் நிறுவனத்திற்கென தனியான சட்ட திட்டங்கள் காணப்படுகின்றன. அதாவது நீங்கள் பதிவு செய்தவுடன் கம்பனி தனியான சட்ட திட்டங்களுக்கு உட்படும். இதன் பொருள் நீங்களும் உங்கள் தனிப்பட்ட சொத்துக்களும் நிறுவனத்திலிருந்து தனித் தனியாக உள்ளன என்பதாகும். பொறுப்பு வரையறுக்கப்பட்ட தன்மையில் இந் நிறுவனம் தனியான சட்ட விதிகளுக்கு உட்பட்டாலும் கடன்களைச் செலுத்துவதற்கு உத்தரவாளர்கள் மட்டுமே பொறுப்பானவர்கள் ஆவர். நீங்கள் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக இருந்தால் பதிவு செய்வது ஒரு குறிப்பிட்ட அளவிலான நம்பகத் தன்மையை அளிக்கின்றது. நன்கொடையாளர்கள் மற்றும் உதவி வழங்குனர்களுடன் நம்பகமான உறவுகளை வளர்க்க இது மேலும் உதவும். இறுதியாக அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கேற்ப தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தீமைகளைப் பொறுத்தமட்டில் கடுமையான பதிவு விதிமுறைகள் கம்பனிகள் அதாவது சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே நீங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை அமைக்க முடியும். பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்கான ஆரம்ப பதிவுக் கட்டணம் மற்றைய கம்பனிகளின் பதிவுக் கட்டணங்களைவிட ஒப்பீட்டளவில் அதிகமாகும். கடுமையான செயல்பாடு விதிமுறைகள் என்ற நிலையில் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை அமைக்கும்போது நீங்கள் பின்பற்ற வேண்டிய சட்டத்தின் கீழ்க் கடுமையான விதிமுறைகள் உள்ளன. சட்டரீதியான தேவைகள் என்ற மட்டில் இவற்றை பின்பற்றத் தவறினால் ROC (கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்) உங்களுக்கான உரிமத்தை வழங்காது.

மேலும் கம்பனி பதிவுநடைமுறைகள் தொடர்பாக நோக்குகையில் நீங்கள் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கின்றபொழுது அல்லது பதிவுசெய்யப்படாத வியாபாரம் அல்லது வியாபாரம் ஒன்றின் மூலமாய் நபர் ஒருவர் பிரபல்யமாகின்றபொழுது அவ் வியாபாரமானது சட்டத்தினடிப்படையில் பதிவுசெய்யப்படவேண்டியிருக்கின்றது அதாவது இலங்கையில் செயல்படும் அனைத்து நிறுவனமும் 1918 ம் ஆண்டு 06 ஆம் இலக்க வியாபாரப்பெயர்க்கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யவேண்டும். ஏனென்றால் எவரெனும் ஒரு நபர், பங்காளர்கள், அல்லது கம்பனி ஒன்று பதிவு செய்யாமல் இயங்குமாயின் அவர்கள் மோசடி ஆனவர்களாய் கருதப்பட்டு தண்டப் பணத்திற்கோ அல்லது சிறைத்தண்டனைக்கோ உட்படுவர். அதுமட்டுமல்லாது வியாபாரத்தின் பெயரைப்பதிவு செய்வதற்கு மேலதிகமாக 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யவேண்டியதும் அத்தியாவசியமாகும். நீங்கள் வியாபாரத்தைப் பதிவுசெய்கிற பொழுது வர்த்தகப் பெயராக (DBA-doing business as ) பதிவு செய்வதற்கு முடியும். இது உங்களது வியாபாரப் பெயரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவது மட்டுமல்லாமல் அனுமதிகள் மற்றும் சான்றிதழ் பத்திரங்களை பெறுவதற்கும் வரி அதிகாரசபை மற்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்வதற்கும் வியாபாரத்தேவைகளுக்கு வங்கி கணக்கொன்றை திறக்கின்றபொழுதும் சந்தை வாய்ப்புகளுக்காக தர அடையாளத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது.

மேலும் கம்பனிகள் நிச்சயமாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். முதலாவதாக கம்பனி பெயருக்கான அனுமதியை பெறுதல் அதாவது நீங்கள் தெரிவு செய்யும் பெயரானது திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத பெயராக இருத்தல் வேண்டும். இதற்கு இத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் நீங்கள் தேர்ந்தெடுத்த பெயரைப் பரிசோதித்து உறுதிப்படுத்த முடியும்.இதற்கு மேலதிகமாக நீங்கள் தேர்வுசெய்த கம்பனிப் பெயரோடு ஒரு இணையத்தளவிலாசத்தையும் (domain name) தேர்ந்தெடுப்பதும் சாலச்சிறந்தது.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களாவன ஏ 16 ஒழுங்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் இல. 1, கம்பனியின் ஒவ்வொரு பணிப்பாளராலும் தமது விருப்பபைத் தெரிவித்து வெவ்வேறாக முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவ இல 18, ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட கம்பனிகள் செயலாளரின் விருப்பை உள்ளடக்கிய மாதிரிப்படிவம் இல 19 மற்றும் பங்குதாரர் அல்லது பங்குதாரர்களின் கையொப்பம் அல்லது கையொப்பங்களுடனான அகவிதியின் (Article of Association) மூலப்பிரதிகள்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்பு நிலை கால்நடை மருத்துவத்தின் நிலைப்பாடு




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்



மனிதர்களிலும் விலங்குகளிலும் நோய்ச் சிகிச்சைக்கும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் நுண்ணுயிர்க் கொல்லிகள் [Antibiotics] பயன்படுத்தப்படுகின்றன. பல வருடங்களாக ஆபத்தான நுண்ணுயிர்களால் [Bacteria] ஏற்பட்ட மிகக் கொடிய நோய்களில் இருந்து மனிதர்களையும் விலங்குகளையும் பாதுகாத்த மேற்படி நுண்ணுயிர் கொல்லிகள் அண்மை நாட்களில் பயனற்றவையாக மாற்றமடைந்து வருகின்றன. குறிப்பாக, நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு நிலை [ Antibiotic resistant] பரவலாகப் பெரும்பாலான நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்குத் தோன்றியுள்ளது.

நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பான நுண்ணுயிர்களின் அதிகரிப்பு மனித மற்றும் விலங்குகளின் சுகாதாரத்தில் பாரிய சவாலாகும். பல நோய்களுக்கு ஒரே தீர்வாக இருந்த நுண்ணுயிர்க் கொல்லிகள் பயனற்று போகின்றமை அதிக உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைவதாக உலக சுகாதார அமைப்பு [ world Health Organization] கூறுகிறது. அதி சக்தி வாய்ந்த முதலாம் தலைமுறை நுண்ணுயிர் கொல்லிகள்[ 1 st Generation ] பயன்படுத்துகை நிறுத்தப்பட்டு இரண்டாம் மூன்றாம் தலைமுறை [ 2nd , 3rd Generation ] மருந்துகளின் பாவனைக்கு மனித மருத்துவ உலகமும் கால்நடை மருத்துவ உலகமும் தள்ளப்பட்டுள்ளன. நுண்ணுயிர்க் கொல்லிகளின் உருவாக்கத்துக்கு நீண்ட கால ஆய்வும். அதிக செலவும், அதி உச்ச தொழில் நுட்பமும் தேவைப்படும் அதே வேளை அந்த நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிரான எதிர் நுண்ணுயிர்கள் தோன்ற சில நொடிப் பொழுதுகளே தேவைப்படுகின்றன. கடந்த பதினைந்து வருடத்தில் புதிதாக எந்த வித நுண்ணுயிர்க் கொல்லிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது ஆபத்தான விடயமாகும்.

மனிதர் மருத்துவத்தில் முறையற்ற விதத்தில் நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்துதலே நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்புக்குப் பிரதான காரணமாக அமைகின்ற அதே வேளை ஆடு ,மாடு, கோழி போன்ற உணவு உற்பத்தி விலங்குகளில் முறையற்ற விதத்தில் நுண்ணுயிர் கொல்லிகளைப் பயன்படுத்துதல் மறைமுகமான விதத்தில் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பை தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. அண்மைக் காலத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் தாவர பயிர் செய்கையிலும் நுண்ணுயிர்க் கொல்லிகள் பரவலாக பயன்படுவதை அவதானிக்க முடிகிறது. அதிகரித்த மனித உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக அண்மைக் காலத்தில் உருவாகியுள்ள கோழி மாடு மற்றும் பன்றிகளின் இராட்சத பண்ணைகள் [ mega Farms] சுகாதாரமாக இருக்க வேண்டிய காரணத்தால் அதிகளவு நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்துவதோடு மிகச் சிறிய பண்ணையாளர்களுக்கும் இலகுவாக கிடைக்கக் கூடியதாக சக்திமிக்க நுண்ணுயிர்க் கொல்லிகள் காணப்படுவதும் இந்த நிலையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. மேற்படிப்




பண்ணைகளின் பால், முட்டை, இறைச்சியை நுகரும் மனிதன் தனக்குத் தெரியாமலேயே நுண்ணுயிர்க்கொல்லிகளையும் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு நுண்ணுயிர்களையும் தனக்குள் அனுமதித்து விடுகிறான்.

இன்று உலகில் இடம்பெறும் கணிசமான மரணங்களில் நுண்ணுயிர்க் கொல்லி எதிப்பினால் நிகழும் மரணங்களும் அமைவது அதிர்ச்சிகரமான விடயமாகும். இன்றைய திகதியில் அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த மருத்துவத் துறையை கொண்ட நாடுகளில் கூட பல ஆயிரக்கணக்கான மரணங்கள் இந்த நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பால் நிகழ்கின்றன. பல வளர்முக நாடுகள் கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனையைக் குறிப்பாக உணவு விலங்குகளில் கட்டுப்படுத்தியபோதும் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் வகை தொகை இன்றி விலங்கு வளர்ப்பில் பாவிப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்தப் பாரதூரமான விடயத்தை பொது மக்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் விழிப்புணர்வைத் தரும் விதமாகவும் சுகாதாரமான விலங்கு உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவும் ஒரே சுகாதார எண்ணக் கருவை [one health cocept] வலுப்படுத்தவும் இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது. இதனை வாசிக்கும் பண்ணையாளர்களும் பொது மக்களும் தாம் சார்ந்த சமூகத்தை விழிப்புணர்வு செய்வதோடு கடைப்பிடிக்கவும் வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்...)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# குறும்படப் போட்டி 2023

தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் "தமிழர் பொருண்மியம்" வார இதழ், ஓகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னிட்டு நடத்தும் குறும்படப்போட்டி.




» குறும்படங்கள் ஒவ்வொன்றும் 3 நிமிடத்திற்கு குறையாமலும் 8 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
» குறும்படங்கள் எமது பொருளாதாரத்தைப் பேசுவதாக அமைதல் வேண்டும்.
» வேறு எந்த இடங்களிலும் வெளியிடப்படாததாகவும், யாரையும் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.
» நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
» உங்களைப் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 20.07.2023
» உங்கள் குறும்படங்களை HD தரத்தில் Google Drive வில் பதிவேற்றம் செய்து கீழ்காணும் மின்னஞ்சலுக்கு, முழுமையான விபரங்களோடு அனுப்பிவைக்க வேண்டும்: Tamilseconomy@gmail.com

**முதல் பரிசு - ரூபா 25,000**
**2ஆம் பரிசு - ரூபா 15,000**
**3ஆம் பரிசு - ரூபா 10,000**

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 0777276949**

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
02.07.2023



# எமக்காக வாழ்தல்

**"எனது காலத்தில் சனி, ஞாயிறு மற்றும் பாடசாலை விடுமுறை நாள்கள் என்றால் கிரிக்கெற் விளையாடும் உபகரணங்களுடன் காலைச் சாப்பாடு முடியப் பெடியள் கோஸ்டியாகப் புறப்பட்டு விடுவோம். வழியில் கிடைக்கும் மாங்காய், புளியங்காய், விளாங்காய், கொய்யா, நாவல், இலந்தைப்பழமென அகப்பட்டதை உண்போம். காலை ஓர் இடத்தில் விளையாட்டு பின்னேரம் ஓர் இடத்தில் விளையாட்டு என பகல் பொழுது முழுவதும் கழிந்து விடும்."**



வேதநாயகம் தபேந்திரன்

நாளாந்தம் கூலி வேலை செய்து பிழைக்கும் குடும்பம் அது. கெட்டித்தனமாகப் படித்து வரும் 3 பிள்ளைகள் உள்ளனர்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் 10 இலட்ச ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கு அண்மையில் அக் குடும்பம் தெரிவு செய்யப்பட்டதை மிகவும் மகிழ்ச்சியுடன் எனக்குச் சொன்னார்கள்.

"மிகவும் சந்தோசம். வீடு கட்டுவதற்கு மேலதிகமாக உங்களாலும் காசு செலவழிக்க வேண்டி வரும். ஆகவே உங்களது இயலளவுக்கு ஏற்ப வீட்டைக் கட்டுங்கள். மற்றையவர்கள் அப்படிக் கட்டினார்கள். இப்படிக் கட்டினார்கள். நாமும் அப்படிக் கட்டுவோமெனச் செய்யாதீர்கள். உங்களுக்காக நீங்கள் வாழுங்கள். மற்றையவர்களுக்காக வாழாதீர்கள் " என ஆலோசனை சொன்னேன்.

சந்தோசமாக ஏற்றுக் கொண்டார்கள். அவ்வாறு செய்தால் அவர்களுக்கு மகிழ்வான வாழ்க்கை தான்.

சில காலத்துக்கு முன்பதாகத் திடீர் மரணம் அடைந்த ஒருவரது மரண வீட்டுக்குப் போயிருந்தேன். "கொட்டில் வீட்டில பிள்ளை குட்டியளோட கடன் இல்லாமல் சந்தோசமாக இருந்தம். கல்வீட்டுக்கு ஆசைப்பட்டுக் கடனைக் கிடனைப் பட்டுக் கட்டினம். இப்ப திடீரெண்டு விட்டுப் போட்

கட னைக் கட்டி முடிக்கப் போறம்."

இறந்தவரின் மனைவி இப்படியாக ஒப்பாரி வைத்தார். மரண வீட்டில் கலந்து கொண்டவர்கள் அவரது ஒப்பாரியை வைத்து அவர்களது கடன் பிரச்சினைகள் பற்றிக் கதைத்தார்கள்.

ஓயாமல் உழைப்போம். கடனைத் திருப்பிச் செலுத்தலாம் என்ற நம்பிக்கையில் இடைவிடாமல் உழைத்துள்ளார்கள். ஓய்வில்லாத வாழ்க்கை திடீர் நோயால் உயிரைக் குடித்துள்ளது.

இனி அந்தக் குடும்பத்தின் சந்தோசங்கள் யாவும் தொலைந்து கடனுடன் போராடும் வாழ்க்கையாகவே இருக்கப் போகிறது.

தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இன ரீதியாக எடுத்துக் கொண்டால் தமிழர்களது விகிதாசாரம் இரட்டிப்பாக உள்ளது.

இதற்குரிய காரணம் தமிழர்கள் வாழ்க்கையை இலேசாக எடுத்துக் கொள்ளாமல் விடுவது தான். அத்துடன் புறவயமான காட்சி விளைவுகளுக்குத் தம்மைப் பறிகொடுத்துப் போலியாக வாழ்வதுமாகும்.

அடுத்தவர் தம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பயம் பலரிடம் தொற்றியுள்ள ஒரு நோய்.

அந்த அடுத்தவருக்கு இவர்களைப் பற்றி எந்த நேரமும் நினைப்பதற்கு நேரமில்லை என்பது பலருக்கும் புரிவதில்லை.

ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள். அவரும் மனைவியும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு உரிய நேரத்தில் அழைத்துச் செல்வார்கள். பாடசாலை முடிவடையும் நேரத்தில் வாசலில் நின்று அழைத்து வருவார்கள்.

பிள்ளைகள் கை கால் முகம் கழுவி ஆடை மாற்றிய பின்னர் ரியூசனுக்கு

வீட்டிற்குக் கொண்டு வந்து விடுவார்கள்.

பிற பிள்ளைகளுடன் பழகினால் தங்கள் பிள்ளைகள் பழுதாகிப் போய் விடுவார்களாம். அதனால் தாங்கள் தங்களது கண்காணிப்பின் கீழ் பொத்திப் பொத்தி வளர்ப்பதாகப் பெருமை கொள்கின்றனர்.

அப் பிள்ளைகள் பல்கலைக்கழக உயர் கல்விக்காக வெளி மாகாணங்களுக்குச் சென்று விட்டார்கள்.

சமூகமயமாகாத, சமூகத்துடன் ஒத்து வாழாத அப்பிள்ளைகள் பிரச்சினைகளைச் சந்திக்கும் போது எவ்வாறு முகம் கொடுத்து முன்னோக்கிப் பயணிக்கப் போகின்றனர் என்பது கேள்விக்குறியே.

எனது காலத்தில் சனி, ஞாயிறு மற்றும் பாடசாலை விடுமுறை நாள்கள் என்றால் கிரிக்கெற் விளையாடும் உபகரணங்களுடன் காலைச் சாப்பாடு முடியப் பெடியள் கோஸ்டியாகப் புறப்பட்டு விடுவோம்.

வழியில் கிடைக்கும் மாங்காய், புளியங்காய், விளாங்காய், கொய்யா, நாவல், இலந்தைப்பழமென அகப்பட்டதை உண்போம். காலை ஓர் இடத்தில் விளையாட்டு. பின்னேரம் ஓர் இடத்தில் விளையாட்டு எனப் பகல் பொழுது முழுவதும் கழிந்து விடும்.

ஊர்ப் பெடியள் ஒண்டாப் போனதுகள். ஒண்டா வருமெனச் சொல்லி எமது பெற்றோர்கள் தேடி வர மாட்டார்கள்.

வெய்யில் குளித்துப் புழுதி அளைந்து ஊர் உலகத்துப் பழங்கள், காய்கள் உண்டசத்து உடம்பில் சேர்ந்தது. தொற்றாநோய்கள் அற்ற பெருவாழ்வும், சவால்களை எதிர்கொள்ளும் பக்குவமும் கிடைத்தது.

அந்தத் தலைமுறை வாழ்க்கை இனி வரவே வராது.

பிறருக்காக வாழ வேண்டாம். எமக்காக

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்காக மேற்குறித்த விண்ணப்பப் படிவம் இல 1 இற்கு பதிலாக விண்ணப்ப படிவ இல 5 ஐப் பயன்படுத்த வேண்டும். அனைத்து படிவங்களும் அச்சிட்டு அல்லது தட்டச்சால் நிரப்புதல் வேண்டும். மாறாக கரங்களினால் நிரப்பப்படும் படிவங்கள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாது.

பொருத்தமான கம்பனிப்பெயரைத் தெரிவுசெய்த பின்னர் விண்ணப்பதாரி குறித்த தினைக்களத்தின் தகவல் கூடத்திலிருந்து ஏ 16 விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் அவ்வாறு இல்லாவிடின் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட இப் படிவத்தை குறித்த திணைக்களத்தில் சமர்ப்பித்து வியாபாரப்பெயர் அங்கீகரிப்பு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டு 3 மாதங்கள் வரை மாத்திரமே செல்லுபடியாகும். ஆகையால் இக் காலப்பகுதியில் கம்பனி ஒன்றின் அகவிதி மற்றும் உரிய கோவைகளை சமர்ப்பிப்பித்து கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யவேண்டும். இல்லாதுவிடில் மீளக் குறித்த கட்டணத்தைச் செலுத்தி மீண்டும் வியாபாரத்தின் பெயரைப்பதிவு செய்யவேண்டியநிலை ஏற்படும். அகவிதிகள் இலங்கையின் கம்பனிகள் சட்டத்திலிருந்து ஏற்கனவே உள்ளதை எடுத்துக் கொள்ளலாம் அல்லது சொந்தமாகவும் உருவாக்கி கொள்ள முடியும்.

இறுதியான நடைமுறையாகப் பொது அறிவித்தலை விடுதல். கம்பனி கூட்டுத்தாபனமாக்கப்பட்டதன் பின்னர் 30 அலுவலக நாட்களுக்குள் கம்பனியின் பெயர், பதிவு இலக்கம், மற்றும் முகவரி உள்ளடங்கலாக கூட்டுத் தாபனமாக்கப்பட்டதை குறிப்பிட்டு ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது அரசாங்க வர்த்தமானியிலிலும் உள்ளூர் பத்திரிகைகளிலிலும் மூன்று மொழிகளிலிலும் பிரசுரிக்கப்படுதல் அவசியம். பத்திரிகையில் பிரசுரிக்கும்போது நீங்கள் வர்த்தகம் இலக்கு வைத்த பிரதேசத்தை கவனத்தில் கொள்ளல் அவசியம். முழு நடைமுறைகளையும் பின்பற்றியபின் அண்ணளவாக 2 தொடக்கம் 3 கிழமைகளில் குறிப்பிட்ட வியாபாரச் சான்றிதழ் உங்கள் கைகளில் கிடைக்கப்பெறும்.

வர்த்தகத்தைப் பதிவுசெய்தல் சட்டரீதியாக ஒரு நிறுவனத்தை நடத்துவதற்காயிருக்கிறது. இதன் பிற்பாடும் பின்பற்றவேண்டிய சில சட்டரீதியான செயன்முறைகளும் உள்ளன. அவையாவன வரி நடைமுறைகள் அதாவது வரிக்கோப்பை திறக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு வருடமும் வரி செலுத்தத் தவறின் அல்லது அவற்றை விலக்கின் அரசாங்கத்தினால் இது குற்றமாகக் கருதப்படும். இந்த நடைமுறையை தபால் மூலமாகவும் அல்லது இணையத்தினூடாகவும் செய்ய முடியும். சித்திரை மாதம்




1 ம் திகதி முதல் அடுத்த வருடம் பங்குனி 31 ம் திகதியைக்கொண்ட காலப்பகுதி இலங்கையின் நிதி ஆண்டு ஆகும். நீங்கள் புதியதாகப் பதிவு செய்த நிறுவனமாயிருந்தால் நிதி ஆண்டு முடிவுற்ற 30 நாட்களுக்குள் வரிக்கோப்பை திறக்க வேண்டியிருக்கிறது. கம்பனியின் பணப் பரிமாற்றங்கள் பற்றிய கையேடுகள், ஊழியர்கள் நம்பிக்கை நிதி மற்றும் சேமலாப நிதி (ETF & EPF) பற்றிய விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் தொடர்பான நடைமுறைகளையும் பின்பற்றுதல் அவசியமாகிண்றது.

eROC – கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் இலத்திரனியல் நடைமுறை சேவைகள்

கம்பனிப் பதிவாளர் திணைக்களம் ஆரம்பித்துள்ள இலத்திரனியல் நடைமுறை சேவைகள். அண்மையில் அரசாங்கம் eROC இணையத்தினூடே கம்பனி பதிவினை மேற்கொள்ளும் சேவையை ஆரம்பித்துள்ளது. கம்பனிப் பதிவுகளை மேற்கொள்ளல். வருடாந்த புள்ளிவிபரங்களை பதிவேற்றல் போன்ற இதர சேவைகளையும் நேரத்தை சேமித்து தேவையில்லாத பயணங்களை தவிர்த்து இலகுவாக மேற்கொள்வதற்காகவே eROC நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு கம்பனி பெயரை அதாவது இதுவரை கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பெயர்கள் அல்லாத புதிய கம்பனி பெயர்களை இவ் இணையத்தினூடே தெரிவுசெய்ய முடியும். இதற்குக் குறித்த இணையத்தளத்தில் ஓர் இணையக்கணக்கை உருவாக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும் இச் சேவையின் ஏனைய பகுதிகளை அணுகவேண்டுமாயிருந்தால் உள்நுழைதல் அவசியமானது இதற்காக இத்தளத்திற்குள் நுழையும் பொருட்டு eROC கணக்கு ஒன்று உருவாக்கபட வேண்டும்.

அதாவது இச் இணையச்சேவையினூடே உள்நுழைந்து அங்கத்துவராக பதிவு செய்தல் (register as a member) என்ற பகுதினூடே சென்று பிறந்த நாடு (country of origin) என்ற பகுதியைத் தெரிவுசெய்து அங்கு கேட்கப்படுகின்ற விடயங்கள் அனைத்தையும் உட்செலுத்தி உங்களுடையதோ அல்லது உங்கள் கம்பனிக்கு உரித்தான மின்னஞ்சல் முகவரியை இட்டு கடவுச்சொல்லை உருவாக்கி பதிவு செய்து கொள்ள வேண்டும். இதன் பிற்பாடு நீங்கள் செலுத்திய மின்னஞ்சல் முகவரியை உறுதிப்படுத்த வேண்டும். இக் கணக்கினால் நீங்கள் பதிவு செய்வதற்கான அங்கீகாரம் கிடைத்துவிடும்.

இதன் பின்னர் உருவாக்கப்பட்ட கணக்கினூடே சென்று பெயரை ஒதுக்கீடு செய்தல் (Name reservation). கம்பனி வகையை தெரிவு செய்து (type of company) ஏற்கனவே உங்களால் தெரிவுசெய்யப்பட்ட கம்பனிப் பெயரை உட் செலுத்துதல். கம்பனி பெயரில் ஏதாவது சுருக்கப் பெயர்கள் இருப்பின் குறித்த திணைக்களத்திற்கு அது பற்றிய மேலதிக விளக்கமும் அவசியமாகின்றது.

தொடர்ந்து உங்களது கம்பனிப் பெயர் அங்கீகரிக்கப்பட்டால் உங்களது மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு தகவல் கிடைக்கப்பெறும் இதன் பின்னர் கம்பனியின் விடயங்களை உட் செலுத்துதல் (fill company details) அதாவது கம்பனியின் வகையைத் தெரிவு செய்து பதிவுசெய்த அலுவலக முகவரி, மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு, கிராம செயலாளர் பிரிவு, தபால் குறியீடு மற்றும் கம்பனியின் மின்னஞ்சல் முகவரி என்பனவற்றை இணையத்தினூடே நிரப்புதல். பின்னாகப் பிரதான பட்டியலிலுள்ள நோக்கங்களில் உங்கள் கம்பனிக்குப் பொருந்தக்கூடிய ஒரு நோக்கத்தைத் தெரிவுசெய்தல்.

பங்குதாரர் பகுதியில் பணிப்பாளர்கள், செயலாளர் அல்லது செயலாளர்கள் மற்றும் பங்குதாரர்களை உட்செலுத்துதல் இதன் போது ஒவ்வொரு பணிப்பாளர்களின் பெயர், மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு, முகவரி,கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் உட்செலுத்துதல். இதே வண்ணமாய் கம்பனிச் செயலாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் விபரமும் விசேடமாக கம்பனி செயலாளரின் பதிவு இலக்கமும் உள்ளடக்கப்படுதல் அவசியமானதாகும்.

பிற்பாடு விண்ணப் படிவங்கள் 1 அல்லது 5 (கம்பனி வகையினடிப்படையில்) , 18, மற்றும் 19 போன்றவற்றை தரவிறக்கம் செய்து அவற்றை நிரப்பி உங்களதும் உங்கள் கம்பனிச்செயலாளரினதும் கையொப்பங்களுடன் ஒளிப்பிரதி செய்து பதிவேற்றம் செய்தல் வேண்டும். வரையப்பட்ட அகவிதிக்கோவை (Ariticle of association) போன்ற அனைத்துத் தேவையான படி வங்களையும் பதிவேற்றம் செய்ததன் பின்னர் கடனட்டை அல்லது பணவட்டை மூலமாகவோ பணத்தை செலுத்திக்கொள்ள முடியும். பதிவு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மேற்கூறியது போல் உங்களது கம்பனி பதிவு செய்யப்பட்டு விட்டது என்பதை மக்களுக்கு அறிவிக்கப் பொது அறிவித்தலை மேற்கொள்ளல்.

எனவே ஒரு விடயத்தை ஆரம்பிக்கு முன் அது பற்றிய புரிதல் இருந்தால் மட்டுமே அதை நேர்த்தியாகவும் கிரமமாகவும் மேற்கொள்ள முடியும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை.

# எங்கட ஆச்சி

- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



முந்தின காலத்திலை எங்கடை சனம் தாங்கள் உற்பத்தி செய்த பண்டங்களை அதாவது உண்ணும் பண்டங்கள் உடுக்கும் பண்டங்கள் எண்டு எல்லாவிதமான பண்டங்களையும் தங்கட இனசனம், சொந்தபந்தங்கள், அக்கம்பக்கத்திலை அயலட்டையிலை இருக்கிறவை, கூட்டாளிமார் எண்டு எல்லாருக்கும் குடுத்து வாங்க வேணும் எண்டு போட்டு கொண்டாடின கொண்டாட்டமே பண்டிகையா வந்தது எண்டு எங்கடை ஆச்சி சொல்லுறவ. பேந்து இந்தப் பண்டிகைகளைச் சனங்கள் தங்கடை சமய, சமூக, பண்பாட்டியல் நம்பிக்கைகளோடையும் தங்கடை கலைகளோடையும் ஒண்டுமொண்டாக் கலந்து இணைச்சு மக்கள் திருவிழாக்களாக அதாவது சமய விழாக்களாக, கலை விழாக்களாக, பண்பாட்டு விழாக்களாகக் கொண்டாடினவை கொண்டாடி வருகினம் எண்டு அப்பு சொன்னவர்.

இன, மத, மொழி, ஊர், கிராம, தேச, கால வர்த்தமானங்கள் எண்டு சொல்லுற எல்லாத்தையும் கடந்து உலகம் முழுக்க சீவிக்கிற எல்லாச் சனங்களும் ஏதோ ஒரு பெயரில தங்கடை இன, மத, மொழி, கலை, பண்பாட்டியல் விழுமியங்களைக் காக்க வேணும், அதுகளை வளக்க வேணும், அடுத்த சந்ததிக்கு பரப்ப வேணும் எண்டு போட்டு விதம் விதமாப் பண்டிகைகளைக் கொண்டாடுகினம். இந்தக் காரணங்களாலைதான் அரசாங்கங்கள் உந்தப் பண்டிகை தினங்களை பொதுவிடுமுறை தினங்களாக அறிவிச்சு உந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுகிற சனங்களின்ரை உணர்வுகளுக்கும், ஆசைகளுக்கும், அவையளின்ரை ஜனநாயக உரிமைகளுக்கும் மதிப்பளிக்கின்றன.

உண்ணான ஆதிமனிசன் தன்ரை தொடர்ந்தேச்சியான உழைப்பாலை தனக்கு ஏற்பட்ட உடல் உளக் களைப்புகளைக் கழுவிக் களைவதற்காக இப்பண்டிகைகளை அல்லது திருவிழாக்களைத் தொடங்கியிருக்கலாம் எண்டு சட்டம்பி விநாசி சொல்லுறவர் எண்டு அப்பு சொல்லுறவர். இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுறதாலை தனிமனிதத் தொடர்புகளும், தனிமனிதக் குடும்பத் தொடர்புகளும், குடும்பங்களிற்கிடையேயான தொடர்புகளும், குடும்பங்களிற்கும் சமூகங்களிற்கிடையேயான தொடர்புகளும், சமூகங்களுக்கு இடையேயான தொடர்புகளும், தேசங்களிற்கிடையேயான தொடர்புகளும் நல்லா வலுப்பெறுகிறது எண்டும் மேம்படுகிறது எண்டும் சமூகவியலாளர்களும், தத்துவவியலாளர்களும், உளவியலாளர்களும் கருதுகினம் எண்ட விசயத்தையும் அப்பு சொன்னவர்.

பண்டிகைக்காலங்களில பொது இடங்களிலை எண்டான்னை சரி சமயத் தலங்களில எண்டான்னை சரி அல்லது தங்கடை தங்கடை வீடுகளிலை எண்டான்னை சரி ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கேக்கை வாழ்த்திறதும் பண்டங்களை ஒருத்தருக்கு ஒருத்தர் குடுத்து வாங்கிறதும் அவட்டையளுக்கு இடையில ஒரு விதமனா பிணைப்பை, அன்பை, நட்பை, உறவை மேம்படச்செய்யுது. பகை உணர்ச்சியையும், காழ்ப்புணர்ச்சியையும், முரண்பாடுகளையும் மழுங்கடிச்சு நாங்கள், எங்கடை, எங்களுக்காகவே எண்ட ஒருங்கிணைவு அவையளிட்டை உண்டாகுது கண்டியோ எண்டுவார் அப்பு.

இந்தப் பண்டிகைகளாலை சனத்துக்கு போதுமான உடல் உள ஓய்வும் கிடைக்கிறதாலை உடல் உள ஆரோக்கியம் வலுசிறப்பா இருக்கிற ஒரு சமுதாயம் உண்டாகிறதோடை அவையள் தங்கடை உழைப்பிலும் தொடர்ந்து உற்சாகமாக ஈடுபடுங்கள். இதாலை சமாதானம், சகவாழ்வு வலுப்பெற்று நாடும் சமூக பொருளாதார விருத்தியில் மேம்படும் எண்டுவா ஆச்சி.

பண்டிகைகள் அடிக்கடி கொண்டாடப்படுகிறதாலை பண்டங்கள் வாங்கப்படுகிறதாலை அதுகள் பரிமாறப்படுகிறதாலை அதுகளை உற்பத்தி செய்யிறவன்ரை பொருளாதாரம் மேம்படும். அதோடை அவன்ரை உழைப்பை நம்பியிருக்கிற அவன்ரை குடும்பங்களும் சந்தோசமா இருக்கும். அதுமட்டுமே அவையளின்ரை பொருளாதாரமும் மேம்படும். அதோட அவையளுக்கு தாங்களும் சமூகத்தின்ரை ஓர் அங்கம் எண்ட உணர்வும் திருப்தியும் ஏற்படும். இந்தப் பண்டிகைகளைச் சாட்டா வைச்சு நடக்கிற கலை நிகழ்வுகளாலை அந்தக் கலைஞர்களின்ரை வாழ்வும் மேம்படும் அதோட கலைகளும் பண்பாட்டியல் மரபியல் அம்சங்களும் காக்கப்படும் எண்டும் அப்பு சொல்லுவார். அப்ப என்னண்டால் இந்தப்பண்டிகைக் கொண்டாட்ட ஏற்பாடுகளில் ஈடுபடுகிற ஒவ்வொரு குடும்பமும் வருவாய் பெறும் எண்டதோடை அதாலை மகிழ்ச்சி கூடி குடும்ப வளமும் கூடும் எண்டுவா ஆச்சி.

பண்டிகைகள் கொண்டாடப்படுகிறதாலை உடல், உள, சமூக, பொருளாதார, கலை, பண்பாட்டியல், ஆன்மீக ஆரோக்கியம் பேணப்பட்டு, வளர்க்கப்பட்டு, சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், சகவாழ்வு என்பன பேணப்படும். வளர்க்கப்படும். இக்காரணங்களாலேயே எங்கடை பெரியவர்கள் அறிஞர்கள் எல்லாரும் பண்டிகைகளைக் கட்டாயப்படுத்தினவை எண்டுவார் அப்பு.

எனவே பண்டிகைகள் எச்சமயம் சார்ந்ததாயினும் சரி, எந்த நம்பிக்கை சார்ந்ததாயினும் சரி, எச்சமூகம் சார்ந்ததாயினும் சரி எவ்வினம் சார்ந்ததாயினும் சரி கொண்டாடப்பட வேணும். பண்டிகைகளுக்கு அறிவியல் ரீதியாக அல்லது அறிவிலித்தனமாக அல்லது அரசியல்த்தனமாக அர்த்தங்களைக் காண்பிக்க முயற்சி செய்து கொண்டாட்டங்களின் குதூகலங்களைக் குறைக்க முயல்கிறது ஆரோக்கியமான சமூக பொருளாதாரச் சமூக வாழ்விற்கு உதவுவதாக அமையாது. எண்டபடியாலை பண்டிகைகளைப் பண்டிகைகளாகப் பார்க்கும் பண்பினை நாங்கள் வளர்த்துக் கொள்ளவேணும். அப்பதான் மனிதம் இன்னும்மாண்பினைப்பெற்றுக்கொள்ளும் எண்டு சொல்லுவா ஆச்சி.



இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2023இல் வெளியிடப்பெற்றது.